# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

Follow us:

மலர் : 03, இதழ்: 134 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (27.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஆகிர் - 03, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


**கமெண்ட் கந்தர்...**

கோட்டா ஐயா ஜனாதிபதியா இருக்கேக்க கப்பலில, ஹெலிகொப்டரில வெளிநாட்டுக்கு போகவேண்டி இருந்தது... இப்ப சாதாரண பிரஜையா இருக்கும்போது விமானத்தில் போகும் வாய்ப்பு கிடைச்சிருக்குது..!






ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் குழுவொன்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர ஆலோசனை நடத்தி வருகிறது.

முன்னாள் அமைச்சர் ஒருவரையும் கொண்ட இந்தக் குழு இது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் உயர்மட்டத்திற்கும் அறிவித்து, தங்களின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளதாம்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கு ரணில் ஆலோசனை!

## வஜிர எம்.பியின் ஏற்பாட்டில் பெசிலுடன் நீண்ட கலந்துரையாடல்

(நமது நிருபர்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை அப்படியே ஒத்தி வைத்துவிட்டு உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்குச் செல்வது பற்றி மந்திராலோசனை ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி., ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ ஆகிய மூவரும் ஒன்றிணைந்தே இது பற்றி ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் வேறு எவரும் கலந்துகொள்ளவில்லை. மூடிய அறைக்குள்ளேயே ஆலோசனை இடம் பெற்றுள்ளது.

இந்த ஆலோசனையை முதலில் சமர்ப்பித்தவர் வஜிர அபேவர்தன. அப்படி உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் அதில் எவ்வாறு வெற்றிகொள்வது என்ற வழிகள் சிலவற்றையும் அவர் பெசிலிடம் விளக்கிக் கூறியுள்ளார்.

"நான்கு வருடங்கள் நிறைவில் ஜனாதிபதி விரும்பினால் ஜனாதிபதித் தேர்தலை நடத்தலாம். அவசரம் ஏற்பட்டால் அடுத்த வருட நடுப்பகுதியில் தேர்தலை நடத்தலாம். இதை வைத்துக்கொண்டு வேறு எந்தத் தேர்தலையும் நடத்தாது அடுத்த வருட நடுப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவோம்" என்று வஜிர அங்கு கூறியுள்ளதாக அறியமுடிந்தது.

அவ்வாறு நடத்தினால் வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளும் மலையகத் தமிழர்களின் வாக்குகளும் ரணிலுக்குக் கிடைக்கும் என்று வஜிர சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் தமிழர்கள் நிச்சயம் ரணிலுக்கே வாக்களிப்பர் என்றும், முஸ்லிம்களும் அவ்வாறே செய்வர் என்றும் வஜிர அபேவர்தன குறிப் பிட்டுள்ளார்.

02 பக்கம்



சுனாமிப் பேரலையால் பேரழிவு ஏற்பட்டு 18 வருட நிறைவை முன்னிட்டு உயிரிழந்தவர்களுக்காக முல்லைத்தீவில் மக்கள் கண்ணீர் சிந்தி நேற்று அஞ்சலி செலுத்தினர். (படப்பிடிப்பு: வன்னி செய்தியாளர்)

# இவ்வாண்டு 11 மாதங்களில்

## 3,600 கடத்தல்கள்

இவ்வருடத்தின் முதல் 11 மாதங்களில் மூவாயிரத்து 596 ஆட்கடத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் திணைக்களத்தின் அறிக்கைகள் ஊடாக இவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் புள்ளி விபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## 497 கொலைகள்

இந்த வருடத்தின் ஜனவரி முதல் நவம்பர் வரையிலான 11 மாத காலப்பகுதியில் 497 கொலைகள் இடம் பெற்றுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், இந்தக் கொலைகளில்...

02 பக்கம்

# நுவரெலியா மருத்துவமனைகளில் உணவு வழங்க முடியாத நிலை

## ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு வழங்காததால் நெருக்கடி

(நா.தினுஷா)

மருத்துவமனைகளுக்கு உணவு வகைகளை விநியோகிக்கும் ஒப்பந்ததாரர்களுக்கான கொடுப்பனவுகளை முறையாக செலுத்தாமையின் காரணமாக, நுவரெலியா மாவட்ட சுகாதார சேவையின் கீழ் இயங்கும் 46 மருத்துவ மனைகளில் உணவுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

மத்திய மாகாண சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழுள்ள, நுவரெலியா மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் காரியாலயத்தின் கீழ் இயங்கிவரும் 46 ஆதார மற்றும் பிரதேச வைத்தியசாலைகளுக்கு நாளாந்த உணவை விநியோகிக்கும் ஒப்பந்ததாரர் களுக்கான...

02 பக்கம்



# அமெரிக்காவுக்கு பறந்தார் கோட்டா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் நால்வர் நேற்றுக் காலை அமெரிக்காவுக்கு சென்றுள்ளதாக விமான நிலைய தகவல்கள் தெரிவித்தன.

முன்னாள் ஜனாதிபதியின் மனைவி அயோமா ராஜபக்ஷ, மருமகள் செவ்வந்தி ராஜபக்ஷ, அவரது மகன் மனோஜ் ராஜபக்ஷ மற்றும் பேரக்குழந்தைகள் கட்டு நாயக்க, பண்டாரநாயக்க...

02 பக்கம்

# மத்தல விமான நிலையத்துக்கு ரூ. 2000 கோடி நஷ்டம்

(ம.சுசிகலா)

மத்தல சர்வதேச விமான நிலையம் கடந்த நான்கு வருடங்களில் இரண்டாயிரம் கோடி ரூபா நஷ்டத்தில் இயங்குவதாக கணக்காய்வாளர் நாயக அலுவலகம் தெரிவித்துள்ளது.

கணக்காய்வு அலுவலகம் சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, மத்தல சர்வதேச விமான நிலையம் 2017 முதல் 2021 வரை இரண்டாயிரம் கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டத்தில் இயங்கி வருகின்றது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, மத்தல சர்வதேச விமான நிலையத்தின் நிர்வாக செலவு 200 கோடி ரூபாவாகும். இது அதன் வருமானத்தை விட இருபது மடங்கு அதிகமாகும்.

விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக செலவிடப்பட்ட மூவாயிரத்து 656 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையும் உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை.

2021இல் மத்தல விமான நிலையத்தின் வரிக்குப் பிந்திய நஷ்டம் 400 கோடி ரூபாவென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# மிகப்பெரிய சுற்றுலா கப்பல் திருகோணமலையில் நங்கூரம்

(ம.சுசிகலா)

ஐரோப்பிய நாடுகளில் இருந்து 516 சுற்றுலாப் பயணிகளுடன் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த MV Silver Spirit என்ற சொகுசு பயணிகள் கப்பல் நேற்று திருகோணமலை துறைமுகத்தை அடைந்தது.

02 பக்கம்

# தினேஷ் மரண விசாரணையில் புலப்பட்டுள்ள புதிய தகவல்கள்

## திருப்பங்கள் குறித்து ஆராய்கிறது பொலிஸ்

(நா.தினுஷா)

பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் குற்றவியல்...

02 பக்கம்

# காலநிலை சீராகும் சாத்தியம்: 04 மாவட்டங்களுக்கு பாதிப்பு

02 பக்கம்

# மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதிக்கு சிறை



இலஞ்சம் மற்றும் சட்டவிரோதபணப்பரிமாற்றவழக்கில் குற்றவாளியாக காணப்பட்ட மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீனுக்கு 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேலும் அவருக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதமும் விதிக்கப்பட்டது.

மாலைதீவின் ஜனாதிபதியாக கடந்த 2013 ஆம் ஆண்டுமுதல் 2018 ஆம் ஆண்டுவரை பதவி வகித்த யாமீன், அரசுக்கு...

02 பக்கம்

# அரசியலமைப்பு பேரவைக்கு பிரதிநிதி நியமனம் குறித்து வியாழன் தீர்மானம்

அரசியலமைப்பு பேரவைக்கு சிவில் சமூகப் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் வியாழக்கிழமை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவில் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக அரசியலமைப்பு பேரவை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட அரசியலமைப்பு பேரவையில் 10 உறுப்பினர்கள் உள்ளடங்கும் அதேவேளை, அவர்களில் மூன்று சிவில் பிரதிநிதிகளும் நியமிக்கப்படுவார்கள். தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், இதுவரை 120 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத பொருத்தமான நபர்கள் மற்றும் தற்போதைய விண்ணப்பங்கள் குறித்து ஆய்வுசெய்த பின்னர், அரசியலமைப்பு பேரவைக்கு மூன்று பிரதிநிதிகள் நியமிக்கப்படுவார்கள் என்று கூறப்படுகிறது.

02 பக்கம்

# தேர்தலில் போட்டியிட தயாராகும் வேடர்கள்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வேடர் சமூகம் சார்பில் சுயேச்சையாக வேட்பாளர்களை போட்டிக்கு அமர்த்த எதிர்பார்த்துள்ளதாக ஆதிவாசிகள் சமூகத்தின் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மிக விரைவில் இடம்பெறவுள்ளதால், விருப்பின் அடிப்படையில் வேடர் சமூகம் சார்பிலும் வேட்பாளர்களை தேர்தலில் போட்டியிட வைக்க முடியுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அம்பாறை, வாகரை மற்றும் பல்லேபெத்த ஆகிய பிரதேசங்களில் சுயாதீன போட்டியாளர்களாக...

02 பக்கம்

# போராட்டத்தின் இறுதியில் இளைஞர்கள் நற்பெயரை வீணாக்கிக்கொண்டார்கள்

## முன்னாள் ஜனாதிபதி மைத்ரி கவலை

இளைஞர்களின் கோரிக்கை நியாயமானது. நல்ல முறையில் போராட்டத்தை ஆரம்பித்திருந்தாலும் இறுதியில் அவர்களின் நற்பெயரை வீணாக்கிக்கொண்டார்கள். மூன்று நாட்கள் தலைவரொருவர் இல்லாமல் நாடு இயங்கியது. அந்த காலப்பகுதிக்குள் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளும் அவர்களில் ஒரு தலைவர் நாட்டைப் பொறுப்பேற்று மக்களின் எதிர்பார்ப்பை வெற்றிகொண்டிருந்தால் இளைஞர்கள் எதிர்பார்க்கும் ஆட்சிமுறையை உருவாக்கியிருக்க முடியும் -என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் 1974ஆம் ஆண்டுவரையில் நாட்டில் இவ்வாறானதொரு நெருக்கடி நிலை ஏற்படும் என்றும் நான் கருதவில்லை. 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பில் நிதி முகாமைத்துவம் தொடர்பில் பல்வேறு பாரதூரமான தவறுகள் இடம்பெற்றுள்ளன. அரசியல்வாதிகளுக்கு உரிமை இல்லாத விடயங்களில் அரசியல் வாதிகள் தலையிட்டமை, பொருளாதார நிபுணர்களின் விடயங்களை அரசியல்வாதிகள் பொறுப்பேற்று அவர்களுக்கு ஏற்றவாறு செயற்பட்டமை, தேசிய உற்பத்தி தொழிற்துறை வீழ்ச்சியடைந்தமை, விருப்பு வாக்கு முறைமை போன்ற காரணங்களே தற்போதைய நெருக்கடி நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளன.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பும், நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையும் அமைச்சரவைத் தெரிவில் மாற்றத்தை ஏற்படுத்தினால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமென்றே நான் கருதுகிறேன். எண்ணிப்பார்க்க முடியாதளவுக்கு கொலைச் சம்பவங்களும், சட்டவிரோத செயற்பாடுகளும் அதிகரித்து வருகின்றன. தற்போதுள்ள முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தினால் மாத்திரமே இந்த நிலைமைக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களின் கோரிக்கை நியாயமானது. ஆனால், நல்ல முறையில் போராட்டத்தை ஆரம்பித்திருந்தாலும் இறுதியில் பெயரை வீணாக்கிக் கொண்டார்கள். மூன்று நாட்கள் தலைவரொருவர் இல்லாமல் நாடு இயங்கியது. அந்த காலப்பகுதிக்குள் நாட்டுமக்கள் ஏற்றுக் கொள்ளும் அவர்களில் ஒரு தலைவர் நாட்டைப் பொறுப்பேற்று மக்களின் எதிர்பார்ப்பை வெற்றிகொண்டிருந்தால் இளைஞர்கள் எதிர்பார்க்கும் ஆட்சிமுறையை உருவாக்கியிருக்க முடியும். இருந்தபோதும் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் போராட்டத்தில் நோக்கத்தை தவறவிட்டுவிட்டார்கள் என்றார்.

# நாட்டில் இனப்பிரச்சினையை தீர்ப்பதாக ஜனாதிபதி கூறுவது கேலிக்குரியது

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி தெரிவிப்பு

நாட்டில் 75 ஆண்டுகளாக தீர்த்துவைக்க முடியாத இனப் பிரச்சினை எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னதாக தீர்த்துவைக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளமை கேலிக்குரியது - என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசியல்வாதிகளில் வயதில் முதிர்ச்சியடைந்த என்னிடம் இது தொடர்பில் புதிய சிந்தனைகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடவில்லை எனவும் குற்றம் சுமத்தினார்.

அன்று நாடாளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஒற்றை ஆட்சியையும் ரணில் விக்கிரமசிங்க சமஷ்டியையும் முன்வைத்தனர்.

அவ்வாறாக போர் நிலவிய நேரத்தில் சம்பந்தனும் திருட்டுத்தனமாக நாடாளுமன்றம் சென்ற 22 பேரும் மக்களிடம் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு பிரசாரம் செய்தனர்.

இதனால் ரணில் தோற்றார். அவர்களை நம்பி மக்களும் வாக்களித்தனர். சமஷ்டியை செல்லாக்காசாக்கினார்கள்.

அன்று சமஷ்டி வேண்டாம் என்று பிரசாரம் செய்த அரசியல் தலைவர்கள், இன்று நானா நீயா என்று போட்டி போடுகிறார்கள்.

2004ஆம் ஆண்டு தேர்தலில் விடுதலைப் புலிகளையும் உள்ளடக்கியதாக அனைவரும் ஒன்றாக செயற்பட வேண்டும் என்று உதயசூரியன் கொடி கேட்டுக்கொண்டது. ஆனால், சம்பந்தன் பிரபாகரனை ஒரு பக்கமாகவும் தானும் சேனாதிராஜாவும் தமிழ்ச்செல்வனோடும் இணைந்தனர்.



எம் இனத்தைக் காட்டிக்கொடுத்த சம்பந்தன் 2004ஆம் ஆண்டு சட்டவிரோதமாக நாடாளுமன்றத்துக்குச் சென்றவர், நாடாளுமன்றில் இருக்கத் தகுதியற்றவர்.

இந்தப் பிரச்சினை பற்றிய கதைகளை நிறுத்துங்கள் கதைத்து ஒன்றும் ஆகப் போவதில்லை - என்றார்.

# 50–55 ரூபா வரை முட்டை விற்பனை

முட்டை ஒன்றை 50 ரூபாமுதல் 55 ரூபாவரையில் விற்பனைசெய்ய கோழி மற்றும் முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் சம்மதம் தெரிவித்துள்ளது.

சந்தையில் ஏற்பட்டுள்ள முட்டைத் தட்டுப்பாடு மற்றும் அதன் விலைக் கட்டுப்பாடு தொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் நேற்று (26) காலை அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஏனைய சங்கங்களுடன் கலந்தாலோசித்து இறுதி முடிவு எடுப்பதாக முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர், கொழும்பு நகரிலுள்ள நுகர்வோருக்கு 55 ரூபா சில்லறை விலையில் இடைத்தரகர்களின்றி முட்டையொன்று விற்பனை செய்யப்படுமென அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் ரத்நாயக்க அழககோன், கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

### ஜனாதிபதித் தேர்தலுக்கு...

'மொட்டு'க் கட்சியின் கைகளில் இருக்கும் சிங்கள வாக்குகளை ரணிலுக்குப் பெற்றுத் தருவதற்கு நீங்கள் உரிய நடவடிக்கை எடுத்தால் எந்தவித சிக்கலுமின்றி இலகுவாக ரணிலால் வெல்ல முடியும் என்றும் வஜிர பெசிலிடம் மேலும் தெரிவித்தாரென அறியமுடிந்தது.

ஏற்கனவே நடத்தப்பட்ட ஆய்வொன்றில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கிராமிய மட்டங்களில் பின்னடைவை சந்தித்துள்ளதால் இப்போதுள்ள நிலையில் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு செல்லக்கூடாதென்பதே ஜனாதிபதி ரணிலின் அபிப்பிராயமாக இருப்பதாக தெரிகிறது.

### அமெரிக்காவுக்கு...

சர்வதேச விமான நிலையத்தினூடாக அமெரிக்கா சென்றவர்களில் அடங்குவதாக அறியமுடிந்தது.

### மாலைதீவின்...

சொந்தமான தீவு ஒன்றை குத்தகைக்கு அளிப்பதற்கு இலஞ்சம் பெற்றதாக வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் அவர் மீதான குற்றச்சாட்டுகளை உறுதிசெய்த குற்றவியல் நீதிமன்றம் சட்டவிரோத பணப்பரிமாற்ற குற்றத்துக்கு ஏழு ஆண்டுகள் சிறையும் இலஞ்சம் பெற்ற குற்றத்துக்கு நான்கு ஆண்டுகள் சிறையும் விதித்துள்ளது.

2019ஆம் ஆண்டு அரச பணத்தை சொந்தத் தேவைக்காக பயன்படுத்திய குற்றச்சாட்டுக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்தக் குற்றச்சாட்டுகள் முழுமையாக நிரூபிக்கப்படாததால் இரு ஆண்டுகளில் அந்தத் தீர்ப்பு உயர் நீதிமன்றத்தினால் இரத்துச் செய்யப்பட்டது.

### 3 6

பெரும்பாலானவை துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் தாக்குதல்களால் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இவற்றில் 46 வீதமான கொலைகள் மேற்படி சம்பவங்களால் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாரியளவு கடத்தல்கள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

2021ஆம் ஆண்டு 835 ஆட்கடத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவ்வருடம் கடந்த 11 மாதங்களில் இரண்டாயிரத்து 800 கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தினேஷ் மரண...

திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளில் திருப்பம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் சந்தேகிக்கப்பட்ட நபர்களுக்கு மாறாக வேறுசில சம்பவங்களினால் இந்த இறப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இதுவரையில் பிரதான சந்தேகநபராகக் கருதப்பட்ட ஷாப்டரின் நெருங்கிய நண்பர், தற்போது கிடைக்கப்பெற்றுள்ள ஆதாரங்கள் பிரதான சந்தேகநபர் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதாக குற்றப்புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கமைய, கொழும்பு, புல்லர்ஸ் வீதியில் அமைந்துள்ள ஷாப்டரின் இல்லம் கடந்த சனிக்கிழமை மாலை அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

விசாரணைகளை முன்னெடுத்துவரும் குழுக்களின் தகவல்களின் அடிப்படையில், ஷாப்டரின் கழுத்தை நெரிக்கவும் அவரின் கைகளை கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்த அன்டனா வயர்களை ஒத்த சில வயர் இணைப்புகள் அவரின் இல்லத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த அன்ரனா வயர்கள் ஷாப்டரின் தாயாரின் அறையிலிருந்து தொலைக்காட்சிக்கு பயன்படுத்தப்பட்டிருந்தன. ஷாப்டரின் அறையிலிருந்த மேசை லாச்சியிலிருந்து 08 வயர் இணைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஷாப்டர் இறந்த விதம் தொடர்பான எழுந்துள்ள புதிய சந்தேகங்கள் தொடர்பில் ஷாப்டரின் பிரேத பரிசோதனையை மேற்கொண்ட மருத்துவர்களிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விளக்கம் கோரியுள்ளதாக தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அது சாத்தியம் அல்லது சாத்தியமற்றதாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் அவர்களின் நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தமக்குக் கிடைத்துள்ள புதிய விசாரணை திருப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஆதாரங்களைத் திரட்டி வருவதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எனவே, பொரளை பொது மயானம் தினேஷ் ஷாப்டருக்கு பரிச்சயம் இல்லாத இடமல்ல என்பது தெளிவாக தெரியவருகிறது. மேலும், பொரளை பொது மயானம் அவருக்கு பரிச்சயம் இல்லாத இடமாக இருந்திருந்தால் கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் தரித்திருக்க மாட்டார் என்று தகவல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

தினேஷ் ஷாப்டர் சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று பிற்பகல் 2.06 மணியளவில் அவரது வீட்டிலிருந்து வெளியேறியமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவத்தினத்தன்று கொழும்பு, மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள சிற்றூண்டிச்சாலையில் இருவருக்கு தேவையானளவும் சிற்றுண்டி வாங்கிச் சென்றுள்ளார். அவ்வாறு வாங்கிச் சென்ற உணவை அவர் உட்கொண்டுள்ளமையும் பிரேத பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஷாப்டரின் கைகளில் கட்டப்பட்டிருந்த வயர் பொதுவாக இந்த நாட்டில் பயன்படுத்தப்படும் வகையைச் சேர்ந்ததல்ல என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஷாப்டர் இருந்த காரின் அருகே ஒருவர் நடந்து செல்வதை குறித்த மயானத்தில் பணி புரியும் சிற்றூழியர் ஒருவர் அவதானித்துள்ளமையும் விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அந்த நபரின் அடையாளம் உறுதிப்படுத்தப் படவில்லை.

இதேவேளை, வர்த்தக நடவடிக்கைகளுக்காக இலட்சக்கணக்கான ரூபா பணத்தை முதலீடு செய்திருந்ததாகவும், ஆனால், முதலீடு செய்த பணத்தை எதிர்பார்த்தப்படி மீளப்பெற முடியாமல் போனமையினால் நாளுக்கு நாள் அவரது வர்த்தகம் நட்டமடைந்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கபபடுகிறது.

நுவரெலியா பிரதேசத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 3000 மில்லியன் ரூபா பெறுமதியான நிலம் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை கையகப்படுத்தியுள்ளமை, யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வியாபாரத்தில் 850 மில்லியன் ரூபாவை முதலீடு செய்து அது நட்டத்தை சந்தித்தமை, கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமஸுக்கு வழங்கப்பட்ட 1,600 மில்லியன் ரூபா விவகாரத்தில் அவருக்கு சுமார் 20,000 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளமை ஆகியவற்றை அவரின் குடும்பத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஷாப்டர் தனது மனைவியின் தாயாருக்கு எழுதிய கடிதத்தில், "இத்தகைய நல்ல மகளை வளர்த்ததற்கு மிக்க நன்றி" போன்ற உணர்ச்சிகரமான கருத்துகளைக் கொண்ட கடிதத்தின் மீதும் புலனாய்வாளர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

கொலைக்கான காரணம், எந்தவகையில் மேற்கொள்ளப்பட்டது, எதிர்பார்ப்பு என்ன, திட்டம் போன்ற விடயங்கள் தொடர்பில் புலனாய்வாளர்கள் கவனம் செலுத்தி வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். இவ்வாறு 75 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### காலநிலை சீராகும்...

**(கே. சுபானி)**

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கமானது நலிவடைந்து இலங்கையின் மேற்குக் கரையை நோக்கி நகரக்கூடும் எனத் தெரிவித்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவிய மழையுடனான காலநிலை இன்றுமுதல் சீராகும் என எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, தாழமுக்கத்தின் தாக்கம் காரணமாக மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் வட மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என எதிர்பார்ப்பதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (26) தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

மன்னார் தொடக்கம் புத்தளம், கொழும்பு, காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பிராந்தியங்களுக்கும் அத்துடன் வங்காள விரிகுடாவின் தென்மேற்கு கடல் பிராந்தியத்திற்கும் மறு அறிவித்தல் கிடைக்கும் வரையில் மீனவர்களும் கடல்சார் ஊழியர்களும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

குறிப்பிட்ட இக் கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 55 - 65 கிலோ மீற்றருக்கும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாகக் காணப்படும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 30 - 40 கி.மீ. வேகத்தில் தென்கிழக்கு திசையில் இருந்து கிழக்குத் திசையை நோக்கி காற்று வீசும்.

நாட்டை சூழவுள்ள ஏனைய கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பான நிலையில் காணப்படும் - என்றார்.

இதேவேளை, காற்றுடன் கூடிய கடும் மழை காரணமாக நான்கு மாகாணங்களில் 110 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

இதுகுறித்து நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பீலி தெரிவிக்கையில், மழை மற்றும் காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலையால் வீடொன்று முற்றாக சேதமடைந்துள்ளதுடன், 109 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அனர்த்தங்களில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளதுடன் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

கண்டி, மாத்தளை, அம்பாறை மற்றும பதுளை ஆகிய நான்கு மாவட்டங்களில் கடும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதுடன், இம் மாவட்டங்களிலுள்ள பல வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் 387 குடும்பங்களைச் சேர்ந்த 1675 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு 322 குடும்பங்களைச் சேர்ந்த 1,367 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார்.




### அரசியலமைப்பு...

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட நபர்களின் பெயர்கள் நாடாளுமன்றத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் ஜனாதிபதி அவர்களை அரசியலமைப்பு சபைக்கு நியமிப்பார்.

### மிகப்பெரிய...

திருகோணமலை துறைமுகத்திற்கு அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை வரவழைத்த மிகப்பெரிய பயணிகள் கப்பல் இதுவாகும் - என இலங்கை துறைமுக அதிகாரசபையின் திருகோணமலை வதிவிட முகாமையாளர் சமன் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சுற்றுலா இடங்களுக்கு சென்றதன் பின்னர் குறித்த கப்பலில் 336 பயணிகள் மற்றும் 404 பணியாளர்களும் நேற்றுக் காலை திருகோணமலை துறைமுகத்தை சென்றடைந்தனர்.

குறித்த சுற்றுலாப் பயணிகள் திருகோணமலை, சிகிரியா, தம்புள்ளை, அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை பயணத்தை முடித்து இன்று அதிகாலை தாய்லாந்து நோக்கி பயணிப்பார்கள். தொடர்ந்து மலேஷியா, சிங்கப்பூருக்கும் செல்லவுள்ளனர்.

இதேவேளை, கப்பலின் வருகையால் 21 இலட்சம் ரூபா வருமானம் கிடைக்குமென திருகோணமலை துறைமுக வதிவிட முகாமையாளர் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### நுவரெலியா...

இருமாத கொடுப்பனவுகள் செலுத்தப்படாமையால், தொடர்ந்து உணவு வகைகளை விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைபெறும் நோயாளர்களுக்கு உணவு வகைகளை விநியோகிப்பதற்காக மருத்துவமனைகளின் நிர்வாகப் பிரிவினரால் நாளாந்தம் பெற்றுக்கொடுக்கப்படும் உணவு வகைகளின் பட்டியலுக்கமைய உணவுகளை தயாரித்து குறித்த வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்துவந்ததாக ஒப்பந்ததாரர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கடன் அடிப்படையில் தமது சந்தைகளில் உணவு தயாரிப்புக்கான மூலப்பொருட்களை கொள்வனவுசெய்து, வைத்தியசாலைகளுக்கு உணவு விநியோகித்து வந்தோம். இரு மாதங்களாக எங்களுக்கு கிடைக்கவேண்டிய பணம் கிடைக்காமையினால் வர்த்தக நிலையங்களுக்கு செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையை செலுத்த முடியாமல் போயுள்ளதுடன், எங்களுக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக வைத்தியசாலைகளுக்கு தொடர்ந்து உணவை விநியோகிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

வருடத்தின் இறுதி காலாண்டு என்பதால் பணம் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தற்போது வரையில் கிடைத்துள்ள பணத்தை முக்கியத்துவம் வழங்கி பட்டியலின் அடிப்படையில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் நிஷங்க விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் முடிவடைவதற்கு முன்னர் மருத்துவமனைகளுக்கு உணவு வகைகளை விநியோகிக்கும் ஒப்பந்ததாரர்களுக்கு பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தேர்தலில்,,,

எங்களின் வேட்பாளர்களை களமிறக்க முடியும். இந்தப் பிரதேசங்களிலுள்ள வேட்பாளர்களை அறிவிக்குமாறு இந்த பிரதேசங்களிலிருக்கும் வேடுவ தலைவர்களுக்கு என்னால் அறிவிக்க முடியும். பலதசாப்தங்களாக நாங்கள் பிரதான கட்சிகளுக்கு வாக்களித்து வருகிறோம். ஆனால், பின்னர் எங்களின் கோரிக்கைகள் குறித்து அந்தக் கட்சிகளில் போட்டியிடுபவர்கள் கவனம் செலுத்துவதில்லை. தேர்தல் பிரசாரங்கள் இடம்பெறும் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காகவே எங்களின் உதவியை நாடுகிறார்கள்.

எனவே, ஏனைய அரசியல் கட்சிகளுக்கு மீண்டும் ஆதரவளிக்காமலிருக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம். எங்களின் கோரிக்கைகள் குறித்து அரசாங்கமும் கவனம் செலுத்துவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டின் முதல் 10 வறுமை மாவட்டங்களுக்குள் வடக்கின் ஐந்து மாவட்டங்களும் உள்ளடக்கம்

## அங்கஜன் எம்.பி. சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி நிருபர்)

நாட்டின் முதல் பத்து வறுமை மாவட்டங்களுக்குள் வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களும் உள்ளடங்குவதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆனையிறவு தேசிய உப்பு நிறுவனத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்;

பொருளாதார நெருக்கடியால் எமது மக்கள் அவஸ்தைப்படுகின்றனர். குறிப்பாக கிளிநொச்சி மாவட்டம் முதல் மூன்று வறுமை மாவட்டங்களில் ஒன்றாக காணப்படுகிறது.

அந்த மாவட்டத்திலுள்ள உப்பு நிறுவனத்திற்கு உதவித்தொகை ஒன்றை வழங்க இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க முன்வந்திருப்பது பாராட்டத்தக்க விடயம். இந்த உதவித்தொகை தற்போதைய இக்கட்டான சூழ்நிலையை சமாளித்துக் கொண்டு நிறுவனத்தை வளர்க்க பெரிதும் உதவியாக இருக்கும்.



கடந்த காலத்தில் ஆனையிறவு உப்பளம் போன்று ஒட்டுசுட்டான் தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஆகிய பாரிய நிறுவனங்கள் வடக்கில் இருந்தன. அந்த நிறுவனங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பில் அமைச்சர்கள் வாக்குறுதி வழங்கிய போதிலும் தற்போதுவரை அதனை நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால், இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் குறித்த நிறுவனங்களை மீள முன்னேற்றகரமான நிறுவனங்களாக திகழ வைப்பார் என்ற நம்பிக்கை உள்ளது.

ஆனையிறவு உப்பு தென் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டே பொதி செய்யப்படுகிறது. இங்கே பொதி செய்யும் வசதிகளை ஏற்படுத்தும்போது சந்தைப்படுத்தல் மற்றும் வேலைவாய்ப்புகளை எமது மாகாணத்திலும் அதிகரிக்க முடியும் என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# லீசிங் வாகனங்கள் கைப்பற்றலில் உரிய விதிமுறைகளைப் பின்பற்றுக

## பொலிஸ்மா அதிபர் பணிப்பு

குத்தகை நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் வாகனங்களை கையகப்படுத்துவதற்கு, வாகன உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தால், குறித்த நிறுவனங்கள் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொலிஸ்மா அதிபர் வெளியிட்டுள்ள புதிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வாகனத் திருட்டு மற்று வாகன உபகரணங்களின் திருட்டு போன்ற குற்றங்கள் நடந்தால், பொலிஸார் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. குத்தகை அல்லது நிதி நிறுவனங்கள் வாகனங்கள் அல்லது உபகரணங்களைப் பெறுவது குறித்து சில பொலிஸ் நிலையங்களில் உரிமையாளரால் செய்யப்படும் முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், இனிவரும் காலங்களில் அத்தகைய முறைப்பாடுகளை ஏற்று உரிய விசாரணை நடத்தி தேவையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வி நிர்வாக சேவையில் 800 வெற்றிடங்கள்!

கல்வி நிர்வாக சேவையில் சுமார் 800 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை மிக விரைவில் நடத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்தின் புதிய ஓய்வூதியக் கொள்கையின் பிரகாரம் எதிர்வரும் 31ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள கல்வி அமைச்சின் அதிகாரிகளின் வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்கள் நியமிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

# ஆழிப்பேரலை 18 ஆம் ஆண்டு நினைவேந்தல்; முல்லை நினைவாலயத்தில் உணர்வெழுச்சி






(விஜயரத்தினம் சரவணன்)

ஆழிப்பேரலையினால் காவுகொள்ளப்பட்ட உறவுகளின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வானது நேற்று (26.12.2022) முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்தில் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

அந்தவகையில் ஆழிப்பேரலையினால் காவுகொள்ளப்பட்ட உறவுகளின் ஆத்மசாந்தி வேண்டி இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் ஆகிய சமய வழிபாடுகளுடன் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து ஆழிப்பேரலையினால் காவுகொள்ளப்பட்டவர்களின் உறவுகள், நினைவுத் தூண்களின் முன்பாக மலர்தூவி, சுடரேற்றி, கண்ணீர் சிந்தி உணர்வெழுச்சியுடன் தமது அஞ்சலிகளை மேற்கொண்டனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உப தவிசாளர் மரியநாயகம் தொம்மைப்பிள்ளை, கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



பதுளை மத்திய கல்லூரியின் மாணவி ரவீந்திரன் டிஷெளர்ணி, க.பொ.த. உயர்தர உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் ஆங்கில மொழி மூலமாக பரீட்சைக்குத் தோற்றி, வெளியான பெறுபேறுகளுக்கு அமைய பதுளை மாவட்ட மட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். இவரை இரா.சிவலிங்கம் ஞாபகார்த்தக்குழு பாராட்டி கௌரவித்தது. பதுளை மத்திய கல்லூரி அதிபரினால் மாணவி டிஷெளர்ணி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.
(பசறை நிருபர்)

# சமூக ஊடக செயற்பாட்டாளர் டிலான் தாக்கப்பட்ட சம்பவம்

## பொலிஸாரால் நால்வர் கைது




சமூக ஊடக செயற்பாட்டாளர் டிலான் சேனநாயக்க கூரான ஆயுதத்தால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 14ஆம் திகதி இரவு நுகேகொடை, பாகொடை வீதியிலுள்ள டிலான் சேனநாயக்கவின் ஸ்டுடியோவிற்குள் நுழைந்த இருவரால் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

கை மற்றும் காலில் வெட்டுக் காயங்களுக்குள்ளான டிலான் சேனநாயக்க களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆழிப்பேரலையால் உயிரிழந்த கள்ளப்பாடு பாடசாலை மாணவர்களுக்கு நேற்று அஞ்சலி





(விஜயரத்தினம் சரவணன்)

கள்ளப்பாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும்போது ஆழிப் பேரலையினால் உயிரிழந்த 68 மாணவர்களுக்கு நேற்று (26.12.2022) கள்ளப்பாடு பாடசாலையில் அஞ்சலி மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலை முதல்வர்அகிலா விஜயரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வானது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு ஆரம்பமானது.

அந்தவகையில் உயிரிழந்த மாணவர்களில் ஒருவரான மகாலிங்கம் புருசோத்தமனுடைய தாயார் மகாலிங்கம் அருந்தவராணி பொதுச்சுடரை ஏற்றி நினைவேந்தல் நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து உயிர்நீத்த மாணவர்களின் நினைவாக கள்ளப்பாடு பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தூபிக்கு மலர்தூவி தீபங்களேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

# பொலிஸாரைத் தாக்கிய மூவர் கைது

பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (25) இரவு, வத்தளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹெந்தல சந்தி பகுதியில் எலகந்த வீதியிலிருந்து கொழும்பு – நீர்கொழும்பு பிரதான வீதியின் நுழைவாயிலுக்கு கூச்சலிட்ட வண்ணம் முச்சக்கரவண்டியில் பயணித்த சிலர் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

பின்னர், கடமையில் இருந்த இரு அதிகாரிகள் குறித்த முச்சக்கரவண்டியை சோதனையிட முற்பட்டுள்ளனர்.

அப்போது முச்சக்கரவண்டி சாரதி மற்றும் பின் இருக்கையில் அமர்ந்திருந்த இருவர் ஆகியோர் மதுபோதையில் இருந்ததை அவதானித்த பொலிஸார், முச்சக்கரவண்டி சாரதியை கைதுசெய்ய முற்பட்டபோது குறித்த குழுவினர் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் வத்தளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, வத்தளை பகுதியில் வைத்து மற்றுமொரு அதிகாரிகள் குழு சந்தேகநபர்கள் மூவரையும் முச்சக்கரவண்டியுடன் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 25, 29 மற்றும் 30 வயதுடைய வத்தளை, மாபோல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களின் தாக்குதலில் காயமடைந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் தற்போது ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சந்தேகநபர்கள் இன்று (27) வெலிசறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

# கட்டைக்காட்டில் சுனாமி நினைவேந்தல்




வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் நேற்று சுனாமி நினைவேந்தல் கண்ணீர் மல்க அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் சுடரை ஏற்றி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

குறித்த நினைவேந்தலில் ஆலய பங்குத்தந்தை, மருதங்கேணி பொலிஸ் அதிகாரி, இராணுவ அதிகாரி, அரசியல் பிரமுகர்கள், உயிரிழந்தவர்களது உறவுகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# போதைப்பொருளுடன் துன்னாலை இளைஞன் கைது

யாழ்ப்பாணம் துன்னாலை பகுதியில் 5 கிராம் 320 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 33 வயதான இளைஞன் ஒருவர் நெல்லியடி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை போதைப்பொருளுடன் குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அரிசி மோசடி செய்த சதொச முகாமையாளருக்கு மறியல்

(அநுராதபுரம் செய்தியாளர்)

ஆறு கோடியே 97 இலட்சம் ரூபா பெறுமதியான அரிசியை மோசடி செய்த சம்பவத்துடன் தொடர்புடைய அநுராதபுரம் சதொச மொத்த விற்பனை நிலையத்தின் முகாமையாளரை எதிர்வரும் ஜனவரி மாதம் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதிமன்ற பிரதான நீதவான் நாலக்க ஜயசூரியவினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அநுராதபுரம் - எலயாபத்துவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட சதொச முகாமையாளரான எச்.பீ.மதுமாலி குணவர்தன என்பவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் சதொச களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெருந்தொகையான நாடு மற்றும் சம்பா அரிசியை மோசடி செய்த சம்பவம் தொடர்பில் இரகசிய பொலிஸாரால் நடத்தப்பட்ட விசாரணைகளின்போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதேவேளை சந்தேகநபர் வெளிநாடு செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்பு கொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.

உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.
e b a j b . ஸ்ரீமத் சுவாமிஜீ—0710192687
h t hh







தேசிய கலை இலக்கியப் பேரவையானது, மக்கள் பண்பாட்டு விடுதலைப் பயணத்தில் 50ஆவது ஆண்டில் காலடியெடுத்து வைக்கின்றது. இதனை முன்னிட்டு அதன் 50ஆவது ஆண்டு தொடக்க நிகழ்வு யாழ்ப்பாணத்திலும் ஹட்டனிலும் 23/12/2022 அன்று இடம்பெற்றது. இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம். (ம.அகிலேஸ்)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, டிசம்பர் 27ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# முடக்கம் வேண்டாமென்ற விழிப்புணர்வே தேவை

சீனாவில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருகிறது. கொரோனா பாதிப்பு குறித்த தினசரி தகவல்களை இனி வெளியிடப் போவதில்லையென, சீனாவின் தேசிய சுகாதார நிலையம் தெரிவித்துள்ளது.

உருமாறிய புதிய வகை கொரோனா தொற்றான பி.எவ்.7 அதிவேகமாகப் பரவி வருவதால், தினசரி 10 இலட்சம் பேர் வரை பாதிக்கப்படுகின்றனர். கடந்த 20 நாட்களில் மட்டும் 25 கோடி பேருக்கு இந்த தொற்று ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. கொரோனா தொற்று பாதிப்பின் முதல் அலையின்போது ஏற்பட்ட இழப்புகள் குறித்து, சரியான தகவல்களை சீனா அளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே உள்ளது.

அதேபோல் இந்த முறையும், சரியான பாதிப்புகள் குறித்தும், பலி எண்ணிக்கை குறித்தும் சீனா தகவல் தருவதில்லை என்று கூறப்படுகிறது. இந்நிலையில், நேற்று தொற்று பாதிப்பு குறித்த தகவல்களை இனி வழங்கப் போவதில்லை என சீன தேசிய சுகாதார நிலையம் தெரிவித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த நிலையம்தான் கொரோனா பாதிப்பு குறித்த தகவல்களை வெளியிட்டு வந்தது. இந்த மாற்றத்திற்கான காரணங்களை சீனா வெளியிடவில்லை.

சீனாவில் ஆரம்பமாகி மீண்டும் ஒரு சுற்று உலக வலம் வர கொரோனா தயாராவதாகத் தெரிகிறது. கொரோனா என்ற வார்த்தையை மெல்ல மெல்ல உலகம் மறந்தே போய்விட்டது. ஆரம்ப காலத்தில் கடைப்பிடித்துவந்த கட்டுப்பாடுகளை யாரும் தற்போது கடைப்பிடிப்பதில்லை. நோய்த்தொற்று குறித்த அச்சம் நீங்கியே விட்டது. தடுப்பூசி மூலம் பெற்ற எதிர்ப்பு சக்தியாலும் சமுதாயத்திலேயே உண்டான எதிர்ப்புச் சக்தியாலும் ஓரளவுக்கு உலகம் நிமிர்ந்தது.

ஆனாலும், புதுப்புது மாற்றுரு வரக்கூடும். அதன்மூலம் புதிய கொரோனா அலைகள் எழ வாய்ப்புண்டு என்று விஞ்ஞானிகளும் உலக சுகாதார நிறுவனமும் எச்சரித்துக்கொண்டே இருந்தனர். பெரியம்மை போன்றோ, கொலரா போன்றோ இந்த வைரஸின் தொற்றிலிருந்து முற்றிலும் விடுபட இன்னும் வேளை வந்த பாடில்லை.

ஒமிக்ரொன் எனப்படும் கொரோனாவின் மாற்றுருவின் துணை மாற்றுரு பி.எவ்.7 சீனாவில் ஒரு புதிய அலையை உண்டாக்கியுள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் இது பரவியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த மாற்றுருவைப் பொறுத்தவரை குறைவான காலத்திலேயே அதிக நபர்களுக்குப் பரவக்கூடியதாகவும், மனிதர்கள் உடலில் குறைவான காலத்திற்குள்ளாகவே வளர்ந்து அறிகுறிகளை உண்டாக்குவதாகவும் செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா தொற்றுப் பரவலுக்கான வாய்ப்புகளைக் குறைப்பது பொதுமக்கள் கைகளில்தான் உள்ளது. ஆம், கைகள்தான். கூடுமானவரை அடுத்தவர்களுடன் கைகுலுக்குவதைத் தவிர்த்தல், கிருமிநாசினி கொண்டு அவ்வப்போது கைகளைச் சுத்தம் செய்துகொள்ளுதல், முகக்கவசம் அணிதல், தனிமனித இடைவெளியைப் பாதுகாத்தல் போன்றவைதான் முந்தைய அலைகளின்போது நமக்கு கொடுக்கப்பட்ட அறிவுரைகள்.

இவற்றை மக்கள் அனைவரும் மறந்தே போய்விட்ட நிலையில், மீண்டும் இதனை நினைவில் கொண்டு செயற்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் புத்தாண்டு, பொங்கல் கொண்டாட்டங்களில் திரளப்போகும் மக்கள் திரள் கொஞ்சம் அச்சம் கொள்ளவே செய்கிறது. இவ்வகையான கொண்டாட்டங்கள் மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்தவை. ஆண்டுக்கு ஒருமுறை வருவது என்பதால் இவ்வகையான விழாக்களைக் கொண்டாட மக்கள் சொந்த ஊருக்குப் பயணிப்பதையும் ஒன்று கூடுவதையும் அவ்வளவு எளிதாகத் தவிர்த்துவிட முடியாது.

முந்தைய அலைகளோடு ஒப்பிடும்போது அண்மைக்காலமாக, கொரோனா தொற்றினால் உயிர்ச்சேதம் அதிக அளவுக்கு இல்லை என்பது ஆறுதல் அளிப்பதாக இருந்தாலும், இணைநோய் உள்ளோரின் நிலைமை கொஞ்சம் இடர் கூடியதாகவே உள்ளது. மரணத்தின் விளிம்பைத் தொட்டுவிட்டு வந்தவர்கள் கூட இன்று நம்முடன் பயணிக்கின்றனர். இந்நிலையில், பொதுமக்கள் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியது அவசியமாகிறது.

அன்றாடம் உழைத்து வாழ்க்கையை ஓட்டும் வறிய நிலையில் உள்ளோர், முறைசாரா தொழில்களில் ஈடுபட்டிருப்போர், சிறு சிறு வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வோர் என ஒவ்வொரு பிரிவினரின் கவலையும் ஒவ்வொரு மாதிரியானது. பன்னாட்டு பெருநிறுவனங்கள், தங்கள் பணியாளர்களை வீட்டிலிருந்தே பணிபுரியச் சொல்லி அவர்களை மேலாண்மை செய்துகொண்டுவிடமுடியும்.

ஆனால், நடுத்தர தொழில் துறையினரான உணவகம், துணிக்கடை, மளிகைக்கடை போன்றவற்றை நடத்தும் வணிகர்களாகட்டும், அதில் பணிபுரிவோராகட்டும், இவ்வாறு வீட்டிலிருந்து பணிபுரிய இயலாது. நேரடியாக மக்களோடு மக்களாக இயங்கினால் மட்டுமே இவர்களது வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும். இதனை மனதில் கொண்டு அந்நிறுவன உரிமையாளர்களும் ஊழியர்களும் செயற்படவேண்டும். அந்தந்த நிறுவனங்களிலிருந்து சேவைகளைப் பெறுவோர்க்கும் இது பொருந்தும்.

கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரை இன்னும் குறைந்த மாதங்களில் பரீட்சைகளை எதிர்கொள்ளவேண்டிய மாணவர்கள் இயல்பாகவே கொஞ்சம் மன உளைச்சலோடுதான் இருப்பர். கொரோனா தொற்று குறித்த அச்சம் அதிகமாகும் நிலையில், அவர்களும் பாதிக்கப்படுவர். இன்றைக்குப் பலரும் தடுப்பூசி செலுத்திக்கொண்டிருப்பது ஓரளவுக்கு ஆறுதலளிப்பதாக உள்ளது.

இந்த குறிப்பிட்ட வகையான மாற்றுரு அதன் போராட்டத்தில் எவ்வாறு பயணிக்கப்போகிறது என்பதை இப்போதே கணித்துச் சொல்வதற்கில்லை. ஒருவேளை டெல்ட்டா போல் கடுமையானதாக மாறவும் வாய்ப்புள்ளது. வைரஸைப் பொறுத்தவரை அதிகமான நபர்களுடைய உடலில் பாய்வதன் மூலம் அதன் வீரியம் மழுங்க வாய்ப்புள்ளது. அதே போல தீவிரமாகவும் வாய்ப்புள்ளது.

'பாம்பென்று தாண்டவும் முடியாது பழுதென்று மிதிக்கவும் முடியாது' என்ற பழமொழிக்கேற்பவே இதன் செயற்பாடுகள் அமைந்துள்ளன. தற்போதைக்கு ஒரே ஆறுதல் மக்களிடையே கொரோனா நோய்த்தொற்று குறித்துப் போதிய விழிப்புணர்வுள்ளது என்பது மட்டும்தான். மீண்டும் ஒரு பொதுமுடக்கம் தேவையில்லை என்கிற சூழலை உருவாக்குவதுதான் விழிப்புணர்வு பெற்ற மக்களின் இன்றைய தலையாய கடமை.

# ஆசை இல்லையேல் துன்பம் இல்லை!



மனித வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதவை உணவு, உடை, உறையுள் ஆகியவை. அந்த மூன்றிலும் உணவுக்கே முதலிடம். வயிற்றுக்காகத்தான் மனிதன் உழைக்க வேண்டியுள்ளது. பசி வந்தால் எதையாவது தின்று பசியைப் போக்கிக் கொள்ளலாம் என்று எவரும் நினைப்பதில்லை. வாய்க்கு ருசியாக சாப்பிட வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறோம்.

பெரும்பாலான மனிதர்களுக்கு இனிப்பு பிடிக்கும். மகிழ்ச்சியையும் வெற்றியையும் இனிப்பைப் பகிர்ந்து கொண்டாடுவது நம் வழக்கம். நம் அனைத்துப் பண்டிகைகளிலும் இனிப்பு இடம்பெறும். இனிப்பு இல்லாத விருந்து இல்லை. இந்தியர்கள் மற்றும்



இலங்கையர்களின் வாழ்வோடு 'இனிப்பு' பின்னிப் பிணைந்தது. ஆகவேதான் இனிப்பு சாப்பிட முடியாதவர்கள் மிகவும் வருத்தப்படுகிறார்கள்.

மனிதர்களுக்கு நோய் வருவது தவிர்க்க முடியாதது. நோயில்லாமல் ஆரோக்கியமாக வாழ்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள். பொதுவாக நோய் என்றால், மருத்துவரை அணுகி மருந்து - மாத்திரை எடுத்துக் கொண்டால் சரியாகி விடும். ஆனால், நீரிழிவு நோய் அப்படியல்ல. ஒருவர் தன் வாழ்நாள் முழுவதும் உணவுக் கட்டுப்பாட்டுடனும் மாத்திரைகளுடன் வாழ வேண்டும் என்பது கொடுமை.

மற்ற நோய் பாதிப்புக்கு நல்ல உணவு சாப்பிடச் சொல்வார்கள். பழச்சாறு, ரொட்டி, சத்து பானங்கள் என்று எடுத்துக் கொள்ளச் சொல்வார்கள். ஆனால், நீரிழிவு என்று கூறப்படும் நோய் அப்படியல்ல. சர்க்கரை நோய் வந்து விட்டால் நமக்குப் பிடித்தமான எதையும் சாப்பிட முடியாது. வசதி இருந்தும் நமக்குப் பிடித்தமான எந்த உணவையும் சாப்பிட முடியாதபோது, ''என்ன வாழ்க்கை இது..?'' என்ற சலிப்பு ஏற்படும்.

முன்பெல்லாம் நீரிழிவு நோயை 'பணக்காரர்களின் நோய்' என்று சொல்வார்கள். ஆனால், இப்போதோ ஏழை, பணக்காரர் என்று யாருக்கு வேண்டுமானாலும் நீரிழிவு நோய் வருகிறது. சமீபத்திய ஆராய்ச்சியின்படி உலக அளவில் 537 கோடி பேர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

நம் உடலில் உள்ள சர்க்கரையை உடலுக்குத் தேவையான சக்தியாக மாற்றுவதற்கு இன்சுலின் என்ற நொதி (சுரப்பு) அவசியமாகிறது. அந்த இன்சுலினை உடல் உற்பத்தி செய்ய இயலாத குறைபாடே 'நீரிழிவு நோய்' எனப்படுகிறது. இதனால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரித்து, நாளடைவில் முக்கிய உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன. சில நேரம் இறப்புக் கூட நேரிடுவது உண்டு.

நீரிழிவு நோய் இருப்பவர்களுக்கு, கண், சிறுநீரகம், கால் நரம்புகள், இருதயம், மூளை ஆகிய உறுப்புகள் பாதிக்கப்படும்.

மற்ற நோய்கள் பாதிக்கும் முன்பு சில அறிகுறிகள் தெரியும். ஆனால், நீரிழிவு நோய் ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்க முடியாத நோயாகும். நமக்கு நீரிழிவு நோய் இருக்கலாமோ என்று சந்தேகப்பட்டு மருத்துவரிடம் போகிறவர்கள், அப்போது தமது உடலில் உள்ள சர்க்கரையின் அளவை அறிந்து அதிர்ச்சி அடைகிறார்கள்.

நீரிழிவு என்பது உண்மையில் நோய் கிடையாது. அது ஒரு வாழ்க்கை முறை என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். உணவுக் கட்டுப்பாடும் உடற்பயிற்சியும் முக்கியம் என்கிறார்கள். இதில் உணவுக் கட்டுப்பாடுதான் சவாலாக உள்ளது. என்னென்ன உணவுகளை, எந்தெந்த நேரத்தில், என்னென்ன அளவில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்கள். உணவை விட்டுவிட்டு சாப்பிட முடியுமா? வீட்டில் இரண்டு இட்லி, அலுவலகத்துக்குச் சென்றபின் இரண்டு இட்லி என்று சாப்பிடுவது சாத்தியமா?

அரிசி சோறு கொஞ்சமாகவும் நார்ச்சத்து மிகுந்த காய்கறிகளை அதிகமாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்கள். உணவகத்தில் சாப்பிடும் போதும், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் சாப்பிடும்போதும், விருந்தினராகச் செல்லும் போதும் உணவுக்கட்டுப்பாட்டை தளர்த்திக் கொள்ள வேண்டியதாகிறது.

விருந்தில் இனிப்பைக் கண்டால், 'சர்க்கரை அளவு கூடிவிடுமே' என்று மனதிற்குள் எச்சரிக்கை மணி அடித்தாலும், நாவுக்கு அடிமை ஆகி சாப்பிட்டு விடுகிறோம். உணவகத்தில் பாதி உணவை சாப்பிட்டு மீதியை வீண் செய்ய மனம் ஒப்பவில்லை. பயணம் செய்யும் போது தொடர் வண்டிகளில் விற்கப்படும் தேநீரும் கோப்பியும் அதிக இனிப்பாக இருக்கின்றன. கோப்பி என்றால் குடித்த பின்னரும் கொஞ்சம் துவர்ப்பு நாவில் நிற்க வேண்டும்.

திருமண விருந்தில் இலையைப் போட்டு அத்தனை உணவையும் பரிமாறிய பின்னர் சாப்பிட அழைக்கிறார்கள். இலையில் வைக்கப்பட்ட இனிப்பை சாப்பிட்டு விடுகிறோம். நாம் இனிப்பை சாப்பிட்டு முடிக்கும் முன்பே வரிசையாக வந்து அனைத்தையும் இலையில் வைத்து விட்டுப் போகிறார்கள். சாம்பார் சாதத்தை சாப்பிடும் முன்பே தயிர் சாதம் வந்து விடும். நாம் அமர்ந்த பின் பரிமாறினால், இனிப்பு வேண்டாம், பாயசம் வேண்டாம் என்று மறுத்து விடலாம்.

பணியிடங்களில் நடக்கும் எல்லா விருந்துகளிலும் நீரிழிவு நோய் உள்ள சிலர் இனிப்பைத் தவிர்த்து விடுகிறார்கள். வேறு சிலர் சிறிது எடுத்து வாயில் போட்டுக் கொண்டு, மீதியை வீணாக்குகிறார்கள். அங்கே இனிப்புக்குப் பதிலாக வேறு எதையாவது தரலாம்.

உணவகங்களில் நீரிழிவு நோயாளிகளுக்கென தனியாக ஓர் இடத்தை ஒதுக்கி அவர்களுக்கு ஏற்றவாறு கொஞ்சம் சோறு, நார்ச்சத்து மிகுந்த காய்கறிகள், சுண்டல், முளைகட்டிய பயறு, சிறு தானிய தோசை, சர்க்கரை இல்லாத தேநீர் போன்றவற்றை வழங்கலாம். அதே போல் திருமண விருந்துகளிலும் நீரிழிவு நோயாளிகளுக்கு தனிப் பந்தி ஒதுக்கலாம். பொது நிகழ்ச்சிகளில் சர்க்கரை போடாத தேநீரை தனியாக வைக்கலாம்.

பிறந்த நாள் நிகழ்ச்சிக்குப் போனால் 'கேக்' சாப்பிட்டு விடுகிறோம். கண்டிப்புடன் மறுக்க முடிவதில்லை. இனிப்பு சாப்பிட்டுவிட்டால், கூடுதலாக ஒரு மாத்திரை எடுத்துக் கொண்டால் போதும் என்று பலரும் எண்ணுகிறார்கள். அது தவறு. நீரிழிவு நோய்க்கு மட்டும் மருத்துவர்கள் பரிந்துரைக்கும் மாத்திரையின் அளவை அப்படியே பின்பற்ற வேண்டும்.

நீரிழிவு நோயாளிகள் சாப்பிடலாம் என்று மருத்துவர்கள் கூறும் பட்டியலில், நமக்கு மிகவும் பிடித்த உருளைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, சேனைக்கிழங்கு, ரொட்டி, பிஸ்கட் போன்றவை இல்லை. சுரைக்காய், வெண்டைக்காய், கோவைக்காய், வாழைக்காய், சுண்டல் போன்றவற்றை சாப்பிடலாம் என்று நாம் விரும்பாதவற்றைப் பரிந்துரைக்கிறார்கள்.

இதனால், விருந்துக்குப் போனால், எதையும் சாப்பிட முடியாமல் வெறுமனே கண்ணால் பார்த்து விட்டு வரவேண்டியுள்ளது. மேலும், ஒரு வீட்டுக்கு விருந்துக்குப் போவதற்கு முன், ''நீரிழிவு நோயுள்ளது. இனிப்பு வேண்டாம்'' என்று முன்கூட்டியே நாம் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் ஆசையாக செய்து வைத்திருக்கும் இனிப்பை நாம் சாப்பிடாததால் ஏமாற்றமடைவார்கள்.

பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோய் வர வாய்ப்புண்டு. பிரசவத்திற்குப் பின்னர் சிலருக்கு அது மாறிவிடும். சிலருக்கு நீரிழிவு நோய் தொடரவும் வாய்ப்புள்ளது. ஆக அவர்களும் இத்தகைய தனிப்பிரிவு அமைக்கப்பட்டால் பயனடைவர்கள். கட்டுப்பாடில்லாமல் சர்க்கரையின் அளவு கூடினால் கரு கலையவும் வாய்ப்புண்டு. எனவே, எச்சரிக்கை தேவை.

நீரிழிவு நோய் பற்றி நிறைய மருத்துவர்கள் சமூக ஊடகங்களில் அறிவுரை தருகிறார்கள். நீரிழீவு குறித்த கவலையில் இருப்பவர்கள் யார் என்ன சொன்னாலும் அதைச் செய்கிறார்கள். பாகற்காய் சாறு கொஞ்சம் குடித்து விட்டு ''இப்போது சர்க்கரை அளவு குறைந்திருக்கும்'' என்று ஆறுதல் அடைகிறார்கள்.

ஆளாளுக்கு அறிவுரை சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். முளை கட்டிய வெந்தயம், ஆவாரம் பூ, பட்டை பொடி, கருஞ்சீரகம், பாதாம் பருப்பு, சிறுதானிய உணவு என்று எல்லாமே நல்லதுதான். ஆனால், மருத்துவர் பரிந்துரைக்கும் மாத்திரைகளால் மட்டுமே நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைக்க முடியும்.

நீரிழிவு நோய் ஒரு குறைபாடு என்பது உண்மைதான். ஆனால், அதனால் ஏற்படும் சிரமங்கள் குறித்து அந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே தெரியும். நீரிழிவு நோய்க்கு முறையான சிகிச்சை எடுத்துக்கொள்ளாததால் பலர் கால்களை இழந்துள்ளனர். பார்வையை இழந்துள்ளனர். அத்துடன் சிறுநீரகக் கோளாறுகளாலும் அவதிப்படுகின்றனர்.

மனிதர்கள் பணத்தில் புரண்டாலும் வாய்க்கு ருசியானதை, பிடித்ததை உண்ண முடியாமல் போவது வேதனை. ஆனாலும், மனிதர்கள் செல்வத்தைக் குவிப்பதில் குறியாக இருக்கிறார்கள். ஏழைகள் கூட தங்களுக்குப் பிடித்ததை வாங்கி மகிழ்ச்சியோடு சாப்பிடுகிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் வரம் வாங்கி வந்தவர்கள். ''நீரிழிவு நோயாளிக்குத் தனியாக இனிப்பு தயாரித்து விற்கிறோம்'' என்று சில கடைக்காரர்கள் சொல்கிறார்கள். ஆனால், செயற்கை இனிப்பு ஊட்டிகளும் உடலுக்கு உகந்தது அல்ல என்கிறார்கள் நீரிழிவு நோய் நிபுணர்கள்.

வாழும் காலம் வரை உடல்நலத்துடன் இருக்க வேண்டுமென்றால் நீரிழிவு நோயாளிகள் கண்டிப்பாக உணவுக் கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டும். விளம்பரத்தில்தான் ஸ்வீட் எடுத்தால் கொண்டாட்டம். ஆனால், நீரிழிவு நோயாளிகளுக்கு ஸ்வீட் எடுத்தால் திண்டாட்டம். எனவே, நீரிழிவு நோயாளிகள் ஆசையைக் கட்டுப்படுத்த வேண்டும் 'ஆசையே துன்பத்துக்குக் காரணம்' என்று புத்தர் சொன்னது நீரிழிவு நோயாளிகளைப் பொறுத்தவரை நூற்றுக்கு நூறு உண்மை.

**பேராசிரியர் வெ.இன்சுவை**

# இன்றைய நாளில்...

* 1831 – அறிவியலாளர் சார்ல்ஸ் டார்வின், உயிரினங்களின் படிவளர்ச்சிக் கொள்கை பற்றிய ஆய்வுக்காக தென்னமெரிக்கா நோக்கிப் புறப்பட்டார்.
* 1845 – பிள்ளைப்பேறுக்கு மயக்க மருந்தாக 'ஈதர்' முதல் தடவையாக ஐக்கிய அமெரிக்காவில் ஜோர்ஜியாவில் பயன்படுத்தப்பட்டது.
* 1864 – இலங்கையில் முதலாவது ரயில் சேவை கொழும்புக்கும் அம்பேபுசைக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது.
* 1911 – இந்தியாவின் தேசிய கீதமான 'ஜன கண மன' முதன்முதலில் கல்கத்தா நகரில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் இசைக்கப்பட்டது.
* 1915 – யாழ்ப்பாணத்தின் முதல் பொது நூலகமான நகுலேசுவரா நூல் நிலையம் கீரிமலையில் திறக்கப்பட்டது.
* 1956 – தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
* 1966 – உலகின் மிகப் பெரும் குகை மெக்சிக்கோவில் கண்டுபிடிக்கப்பட்டது.
* 1968 – சந்திரனுக்கான முதலாவது மனித விண்வெளிப்பயணக் கப்பலான அப்பல்லோ-8 வெற்றிகரமாக பசிபிக் கடலில் இறங்கியது.
* 2000 – யாழ்ப்பாணம், தென்மராட்சி மிருசுவிலில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற 8 பொதுமக்கள் இலங்கைப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
* 2007 – பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனசீர் பூட்டோ ராவல்பிண்டியில் தற்கொலைக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

# நக்கல் நமசிவாயம்

காரில் கிடந்த தொழிலதிபர் தினேஷ் தற்கொலை செய்துகொண்டாராம்..! பொலிஸ் சொல்லுது..! தண்ட கைகளை தானே கட்டிக்கொண்டு, தண்ட கழுத்த தானே நெரிச்சுக்கொண்டு செஞ்சுகொண்ட முதல் தற்கொலை இதுவாத்தான் இருக்கலாம் என்னங்கோ..!



# சுனாமியில் இறந்தவர்களை நினைவுகூர்ந்த மலையக மக்கள்





(எஸ்.கணேசன்)

சுனாமி ஆழிப்பேரலை இடம்பெற்று 26.12.2022 அன்றைய தினத்துடன் 18 ஆண்டுகள் நிறைவடைவதை நினைவு கூரும் வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு மலையக மக்கள் தமது அஞ்சலியை நேற்று செலுத்தினர்.

கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இலங்கையின் வரலாற்றில் மிகவும் துயரகரமான நிகழ்வாக காலை 9.25 மணிக்கு ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்றது.

இந்த அனர்த்தத்தில் உயிர்நீத்த இலங்கை உறவுகளுக்கு தமது அஞ்சலியை மலையக மக்களும் செலுத்தினர்.

ஹட்டன் பொலிஸார், நகர வர்த்தகர்களின் ஏற்பாட்டில் ஹட்டன் புத்தர் சிலைக்கு முன்னால் இடம்பெற்ற அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் ஹட்டன் நகரில் உள்ள வங்கி ஊழியர்கள், நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என அனைவரும் கலந்துகொண்டனர்.

# ஆழிப்பேரலை நினைவேந்தலால் கண்ணீரில் மிதந்தது கள்ளப்பாடு




(விஜயரத்தினம் சரவணன்)

கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் முல்லைத்தீவு - கள்ளப்பாட்டைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் உயிரிழந்தனர். இந்நிலையில், அவ்வாறு உயிரிழந்தவர்களின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 26.12.2022 அன்று கள்ளப்பாடு தெற்குப் பகுதியில் நேற்று உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஆழிப்பேரலையில் உறவுகளைப் பறிகொடுத்தசெல்லத்துரை கனகமணி மற்றும், கிட்ணபிள்ளை மகாலட்சுமி ஆகியோர் இணைந்து பொதுச்சுடரை ஏற்றினர்.

தொடர்ந்து ஆழிப்பேரலையின்போது உயிரிழந்த உறவுகளின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவப்பட்டு, சுடரேற்றப்பட்டதுடன், ஆழிப்பேரலையினால் காவுகொள்ளப்பட்டவர்களின் உறவினர்கள் கதறியழுது, கண்ணீர் சொரிந்து தமது அஞ்சலிகளை உணர்வெழுச்சியுடன் மேற்கொண்டனர்.

மேலும், இந்நிகழ்வில் முன்னாள் வட மாகாணசபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருமான துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், காணி உத்தியோகத்தர் சோதிநாதன் சேந்தன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வுபெறும் அதிபர்களுக்கு சேவை நலன் பாராட்டு விழா




(தலவாக்கலை நிருபர்)


நுவரெலியா கல்வி வலயத்தில் சேவையாற்றி வரும் 8 அதிபர்கள் இம்மாத இறுதியில் ஓய்வு பெறுகின்றனர்.

நுவரெலியா கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய இவர்களின் சேவை நலன் பாராட்டு விழா நுவரெலியா கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி உதவி கல்விப் பணிப்பாளர், மூன்று கோட்டத்தையும் சேர்ந்த கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் அவரவர் சேவையாற்றி வரும் பாடசாலைகளுக்கு நேரடியாக சென்று பாடசாலை சமூகத்துடன் இணைந்து இந்த அதிபர்களை பாராட்டி கௌரவித்தனர்.

அந்த வகையில் 35 வருட அரச சேவையிலிருந்து அக்கரபத்தனை தமிழ் வித்தியாலய அதிபர் ஆறுமுகம் மாரிமுத்து, 33 வருட அரச சேவையிலிருந்து அக்கரபத்தனை போட்மோர் தமிழ் வித்தியாலய அதிபர் கிருஸ்டோபர் சாள்ஸ், 34 வருட அரச சேவையிலிருந்து ஹோல்புறுக் ஆரம்ப பாடசாலை அதிபர் சுப்ரமணியம் புஸ்பனீனா, 35 வருட அரச சேவையிலிருந்து நானு-ஓயா கார்லிபேக் தமிழ் வித்தியாலய அதிபர் அந்தோனிமுத்து சவரிமுத்து, 31 வருட அரச சேவையிலிருந்து நானு-ஓயா கிளாஸ்கோ தமிழ் வித்தியாலய அதிபர் சுப்பையாபிள்ளை கோகிலவாணி, 35 வருட அரச சேவையிலிருந்து சென். கிளையார் தமிழ் மகா வித்தியாலய அதிபர் ஆறுமுகம் சத்தியமூர்த்தி, 40 வருட அரச சேவையிலிருந்து பத்தனை தமிழ் மகா வித்தியாலய அதிபர் சுப்பையா செல்வம் ஆகியோர் ஓய்வு பெறுகின்றனர்.

இவர்கள் நுவரெலியா கல்வி வலயத்தில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர் தரப் பரீட்சை ஆகியவற்றில் மாணவர்கள் அதிகளவில் சித்திபெறுவதற்கு பாரிய பங்காற்றியுள்ளார்கள். இவ்வாறு நுவரெலியா கல்வி வலயத்தில் கல்வியின் வளர்ச்சிக்கு பாரிய பங்காற்றிய இவர்களை நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர், வலயத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி உதவி கல்விப் பணிப்பாளர், உதவி கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகம் ஆகியோர் தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளனர்.

# லெனின் மதிவானம் நினைவு நூல் வெளியீடு 31ஆம் திகதி




(ஆ.ரமேஸ்)

எழுத்தாளர் அமரர் லெனின் மதிவானம் நினைவாக 'லெனின் மதிவானம் இளமை - புலமை - இனிமை' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை (31) நோட்டன் வாசகர் வட்டம் ஏற்பாட்டில் எழுத்தாளர் சாகித்ய ரத்னா மு.சிவலிங்கம் தலைமையில் ஹட்டன் நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வை ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம் தொகுத்து வழங்கவுள்ளார்.

அத்துடன் நூல் குறித்து பேராசிரியர் பால சுகுமார், மல்லிகைப்பூ சந்தி ம.திலகராஜ் உட்பட ஜே.சற்குருநாதன், சிராஜ் மஷ்ஹூர், சுமதி அன்பரசு மற்றும் சிவஜேசுநேசன், ச.வில்சன் ஆகியோர் விளக்கவுள்ளனர்.

அமரர் லெனின் மதிவானம் குடும்பத்தின் சார்பில் ஆர்.ஜெ.ட்ரொட்ஸ்கி கலந்துகொண்டு நூலைப் பெற்றுக் கொள்ளும் இந்நிகழ்வில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு நோட்டன் வாசகர் வட்டத்தின் தலைவர் மு.இராமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.






**நத்தார் தினத்தை முன்னிட்டு உடப்புஸ்ஸலாவை பிரதேச தேவ சபையினர், உடப்புஸ்ஸலாவை கே.டி.எஸ். வரவேற்பு மண்டபத்தில் நத்தார் தின நிகழ்வுடன், பல்வேறு சேவைகளைப் பாராட்டி கௌரவிப்பு நிகழ்வையும் நடத்தினர். இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம். (ஆ.ரமேஸ்)**

# புனரமைக்கப்பட்ட நெசவாலை திறப்பு



(கண்டி நிருபர்)

கலகெதர, நியங்கொட கைத்தறி நெசவாலை 10 மில்லியன் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த ஆறு வருடங்களாக கைவிடப்பட்ட நிலையில், மேற்படி நெசவாலை காணப்பட்டது. சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் கட்டடங்கள் மற்றும் இயந்திர சாதனங்களுடன் கைவிடப்பட்ட நிலையில் கவனப்பாரற்றுக் காணப்பட்ட இந்த நெசவாலை குறித்து மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேயின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதன் காரணமாக அது புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே மற்றும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து அதனைத் திறந்து வைத்தனர். இதனை 15 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்க நிதி ஒதுக்கப்பட்ட போதும், மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேயின் தலையீடு காரணமாக 10 மில்லியன் ரூபாவில் புனரமைக்க முடிந்ததாக இங்கு உரையாற்றிய கைத்தொழில் அமைச்சின் செயலாளர் உபாலி ரணவக்க தெரிவித்தார்.

# பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சார்ஜன்ட்



(ஆ.ரமேஸ்)

34 வருட பொலிஸ் சேவையைப் பூர்த்தி செய்துள்ள இராகலை பொலிஸ் நிலைய பொலிஸ் சார்ஜன்ட் சமயன் செல்லதுரை நேற்று (26) தனது பொலிஸ் கடமையிலிருந்து ஓய்வுபெற்றார்.

1990ஆம் ஆண்டு கண்டி அஸ்கிரிய பொலிஸ் பயிற்சி கல்லூரியில் தனது பொலிஸ் பயிற்சியில் இணைந்து கொண்ட இவர் பயிற்சியின் பின் உப பொலிஸ் கான்ஸ்டபிள் பதவியை களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் வகித்தார்.

பின்னர் நுவரெலியா, இராகலை, யாழ், நெடுந்தீவு, திம்புல-பத்தனை, மட்டக்களப்பு, கந்தப்பளை ஆகிய பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் கான்ஸ்டபிளாக பதவி வகித்த அவர் மீண்டும் இராகலை பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டு அங்கு பொலிஸ் சார்ஜன்ட் பதவியில் விசேட புலனாய்வுப் பிரிவில் பதவி வகித்தார். இவர் 34 வருடங்கள் பொலிஸ் சேவையை புரிந்த நிலையில், இவரின் பொலிஸ் சேவை வயது எல்லையின் பிரகாரம் சேவையிலிருந்து 26.12.2022 அன்று ஓய்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன அழிப்பிற்குப் பின்னர் கலையை வளர்ப்பதில் சமூகம் பின்னடிப்பு!

## வலி. மேற்கு தவிசாளர் கவலை



இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னர் ஜேர்மனி பல கலாசார மண்டபங்களை அமைத்தது. கலைதான் எங்களை மீண்டெழச் செய்யும் என அவர்கள் நம்பினார்கள். ஆனால், எங்களது அழிவிற்கு பின்னர் நாங்கள் எங்களது கலைகளை வளர்ப்பதற்கு பின்னடிக்கின்றோம் என வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (25) சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தினர் ஏற்பாடு செய்த மாபெரும் கலைவிழாவில் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கலை, கலாசார நிகழ்வுக்கு ஒரு களம் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், யாழ்ப்பாணத்தில் இந்த விடயத்தை எடுத்து நோக்குவோமேயானால் நிதி ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. யாழ்ப்பாணத்திலும் கலை, கலாசாரங்களை வளர்ப்பதற்கு களம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

இந்நாட்டினுடைய பிரச்சினை, இந்த நாட்டு மக்களுடைய தேவை, எங்களுடைய சமயத்திற்கு இருக்கின்ற பிரச்சினை போன்ற பல பிரச்சினைகளோடு இருக்கின்ற எங்களுக்கு நிம்மதியைக் கொடுத்து, ஆயுளைக் கூட்டுகின்ற ஒரே விடயம் இந்த கலைதான். யார் தடுத்தாலும் எங்களது கலை, கலாசார விழுமியங்களை நாங்கள் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுக்கு பின்னர் இப்போது இருக்கின்ற நிலையில், எமது இருப்புகளை எல்லாம் அழிக்கின்ற ஒரு நிகழ்வு கச்சிதமாக நடைபெறுகிறது. எமது கலை, கலாசாரங்கள் அனைத்தையும் அழிக்கின்ற ஒரு மென்போக்கு நிகழ்வு இங்கு நடக்கின்றது. நாங்கள் எங்களது கலை, கலாசார விழுமியங்களை தொலைத்தோம் என்றால் நாங்கள் ஒரு அடையாளம் இல்லாத இனமாக, மேலும் பாரிய மோசமான நிலைமைக்குள் தள்ளப்படுவோம் - என்று தெரிவித்தார்.




**பதுளை பாரதி மகா வித்தியாலயத்தின் 2003ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் 19ஆவது ஆண்டு ஒன்றுகூடல் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் மேற்படி பாடசாலை மாணவர்களுக்கு கற்கை உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (பதுளை நிருபர்)**

திகதி 25.12.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4980
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.7,629,140.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 9 1 3 9 3 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.16,447,214.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3222
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,988,000.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 23 47 50 54
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,295,826.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1435
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,428,760.00
வெற்றி இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 1 4 7 2 7 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,578,453.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 1010
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,836,060.00
வெற்றி இலக்கினம் U வெற்றி இலக்கங்கள் 04 38 50 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 139,333,161.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 289
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,983,540.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 01 15 45 57
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,565,901.00

கோடி 28 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1328
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,481,680.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.288,719,922.00
J 18 03 25 61 63
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk






பதுளை சரஸ்வதி தமிழ் தேசிய பாடசாலையில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் தலைவர்களுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வு அதிபர் திருலோகச்சந்தர் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டிருந்த மாணவர் தலைவர்களையும் சிறப்பு விருந்தினர்களையும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பசறை நிருபர்)

# யாத்திரிகர்கள் அவதானமாக நீராடவும்

## நீர்வீழ்ச்சி பாதுகாப்பு அமைப்பு எச்சரிக்கை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி வழியாக சிவனொளி பாதமலைக்கு செல்லும் யாத்திரிகர்கள் களுகங்கை நதி உட்பட பல்வேறு நீர்நிலைகளில் நீராடும்போது கவனயீனம் காரணமாக உயிராபத்துகளை எதிர் கொண்டு வருவதாக இரத்தினபுரி மாவட்ட நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

சிவனொளிபாதமலை யாத்திரைக் காலத்தில் மட்டுமன்றி ஏனைய சூழ்நிலை களிலும் இப்பிரதேச நீர்நிலைகளில் நீராடவும் உல்லாசமாக விடுமுறையைக் கழிக்கவும் வரும் பயணிகள் உயிரா பத்தை எதிர்நோக்கியுள்ளதாக இவ் வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தினூடாக சிவனொளிபாதமலைக்குச் செல்லும் 3 வீதிகளிலும் களுகங்கை, வளவை கங்கை உட்பட இவற்றின் கிளையாறுக ளும் நீர்வீழ்ச்சிகளும் அதிகமாகக் காணப் படுகின்றன. இப்பிரதேசத்திலும் மத்திய மலைநாட்டின் எல்லைப் பகுதிகளுக்கும் மழை பெய்தால் குறித்த நீர்நிலைகளில் வெள்ளம் ஏற்படுவதுண்டு. எனவே இங்கு உயிராபத்து நிகழ்வுகள் அடிக்கடி ஏற்படுகின்றன. சில வாரங்களுக்கு முன்னர் இரத்தினபுரி- பலாபத்தல ஊடாக செல்லும் களுகங்கை நதியில் நீராடச் சென்று வெள்ளத்தில் சிக்கி 3 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

எனவே இந்நீர்நிலைகளை நாடி வருவோர் இவ்விடங்களில் உள்ள அறிவுறுத்தல்களை வாசித்து அவதான மாக செயல்பட்டால் உயிராபத்துகளில் இருந்து தவிர்த்து கொள்ளலாம் என இரத்தினபுரி மாவட்ட நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

# பொலிஸ் சேவைக்கு தெரிவான மூவருக்கு பாராட்டு விழா



(தலவாக்கலை நிருபர்)

அக்கரப்பத்தனை டெல் தோட்டத்தி லிருந்து முதல் தடவையாக இலங்கை பொலிஸ் சேவைக்கு 3 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஜெயகுமார் தர்ஷன், பாலச்சந்திரன் பிரதீப், சிவகு மாரன் லீபன் ஆகிய மூவரே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்களாவர்.

கொழும்பு, ஹம்பாந்தோட்டை, பாணந்துறை ஆகிய பொலிஸ் நிலையங் களுக்குத் தெரிவாகியுள்ள இவர்கள் லோவ கிரண்லி பாடசாலையின் பழைய மாணவர்களாவர். இவ்வாறு தெரிவாகிய இவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அக்கரப்பத் தனை டெல் தோட்டத்தைச் சேர்ந்த பொதுமக்களின் ஏற்பாட்டில் நடை பெற்றது. இந்நிகழ்வில் மூவரும் அத்தோட்ட மக்களால் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக் கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக லோவ கிரண்லி பாடசாலையின் அதிபர் குழந்தைவேலு பாலகிருஷ்ணன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் ஸ்டீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# குருகெட்டவில் மண்சரிவு அபாயம்

(உக்குவளை நிருபர்)



தற்போது நிலவும் கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக உக்குவளை - வத்துகாமம் பிரதான வீதியில் குருகெட்ட எனும் பகுதியில் பாதையின் இரு பக்கங்களிலும் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு மண்சரிவுகள் ஏற்பட்ட இடங்களின் மேட்டுப் பகுதிகளில் பல வீடுகள் மற்றும் மின் கம்பிகள் என்பன அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது இந்நிலையில், மீண்டும் இதேபோன்று கடும் மழை மற்றும் காற்று ஏற்பட்டால் இப்பகுதிகளிலுள்ள வீடுகளுக்கும் மின் கம்பிகளுக்கும் பலத்த சேதங்கள் ஏற்படலாம் என இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். எனவே, இது குறித்து அனர்த்த நிவாரண மத்திய நிலையம் உடனடியாக அவதானம் செலுத்தி தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விபத்தில் இளைஞன் பலி

(பதுளை நிருபர்)

மொனராகலை - பிபிலை பகுதியில் லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் பதுளையைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பிபிலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிபிலை - அம்பாறை பிரதான வீதியில் அம்பாறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் முன்னால் பயணித்துக்கொண்டிருந்த லொறியை முந்திச் செல்ல முயன்றபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் பிபிலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்விபத்து தொடர்பில் லொறி சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். பிபிலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# போதைப்பொருளை கட்டுப்படுத்த விசேட குழுக்கள் நியமனம்

(தலவாக்கலை நிருபர்)

மத்திய மாகாணத்தில் பாடசாலைகளில் போதைப் பொருள் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக 47 விசேட பொலிஸ் குழுக்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தலைமையில் கண்டி, கம்பளை, மாத்தளை, ஹட்டன் மற்றும் நுவரெலியா ஆகிய பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் இந்த விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப்படும் இந்த விசேட நடவடிக்கைகள் மூன்று மாத காலத்திற்கு மேற்கொள்ளப்படும் எனவும், இதன்போது போதைப்பொருள் விநியோகம் மற்றும் பாவனையை குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# யாழில் இடம்பெற்ற தேசிய பாதுகாப்பு தின நிகழ்வுகள்








(யாழ். நிருபர்)

சுனாமி ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்க ளின் 18 ஆம் ஆண்டு நினைவு தினமான நேற்று திங்கட்கிழமை தேசிய பாதுகாப்பு தின நிகழ்வுகள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றன. நிகழ்வின் ஆரம்பத்தில் தேசியக்கொடி ஏற்றப்பட்டு காலை 9 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது சுனாமி அனர்த்தத்தின்போது உயிரிழந்தவர்கள் நினைவாக நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு, இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரீ.எ.சூரியராஜா, மதத் தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

# நாயன்மார்கட்டு பாரதி வீதியினை உடன் புனரமைக்க கோரிக்கை



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு பாரதிவீதி ஐ புறொஜெக்ட் திட்டத்தில் புனரமைப்பதற்காக தெரிவுசெய்யப்பட்டு பலவருடங்களாகியும் இதுவரை புனரமைப்பு வேலைகள் எதுவும் நடைபெறாமையினால் பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார் அண்மையில் நடைபெற்ற வலி. கிழக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் குறித்த பகுதியின் சபையின் கவனத்திற்கு கொண்டுவந்ததோடு உடனடியாக பாரதி வீதியை புனரமைக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கோப்பாய் பிரதேச சபையால் நாயன்மார்கட்டு பாரதி வீதி ஐ புறொஜெக்ட் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு அளவீடுகள் அனைத்தும் செய்யப்பட்டு அதற்குரிய ஒப்பந்தமும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் செய்யப்பட்டு அதற்குரிய ஒப்பந்தகால அறிவித்தல் பலகையும் நாயன்மார்கட்டு சந்தி பகுதியில் நாட்டப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை எவ்விதமானபுனரமைப்புப் பணிகளும் ஆரம்பிக்கவில்லை. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

மேற்படி வேலைகள் தொடர்பில் காலத்திற்குக் காலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினருடன் பல முறை பேசியும் எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. மக்களின் அத்தியாவசிய போக்குவரத்து தேவைகளுக்கு உகந்தவகையில் வீதியினை புனரமைக்க உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையில் இருந்த மக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். குறுகிய காலப்பகுதியில் இவ்வீதி புனரமைக்கப்படாத பட்சத்தில் மக்கள் வீதிக்கு இறங்கி போராட வேண்டிய சூழல் உருவாகும்.

எனவே, இதனை தவிர்க்கும் வகையில் கோப்பாய் பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை செயலாளர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவர்கள் கோப்பாய் பிரதேச செயலர், அரசாங்க அதிபர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் ஆகியோருடன் தொடர்புகொண்டு வீதிப் புனரமைப்பை உடன் ஆரம்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# யாழ். அரச அதிபருக்கு இடமாற்றம்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் 2023 ஜனவரி முதல் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார் என தெரியவருகிறது.

யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் மகேசன், அமைச்சு ஒன்றின் செயலாளராக இடமாற்றம் பெற்று கொழும்பு செல்லவுள்ள நிலையில், புதிய யாழ்ப்பாண மாவட்ட செயலராக தற்போதைய கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் நியமிக்கப்படவுள்ளார்.

இதேநேரம், கிளிநொச்சி மாவட்ட செயலாளராக புதியவர் ஒருவர் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# யாழ். சிறையிலிருந்து ஐந்து கைதிகள் விடுதலை

(யாழ். நிருபர்)

நத்தார் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஐந்து கைதிகள் நேற்று முன்தினம் (25) விடுதலை செய்யப்பட்டனர்.

கிறிஸ்தவர்களின் பண்டிகையான நத்தார் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைவாக நாடளாவிய ரீதியில் 309 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

அதற்கமைவாக, சிறு குற்றச் செயல்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்தாமை போன்றவற்றால் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஐந்து கைதிகளே பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு இவ்வாறு விடுவிக்கப்பட்டனர்.

# கணவனின் கழுத்தில் கத்தி வைத்து மனைவியை வன்புணர முயற்சி

## யாழில் சம்பவம்: ஒருவர் கைது; இருவர் தலைமறைவு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கணவனின் கழுத்தில் கத்தியை வைத்து மனைவியை வன்புணர முயற்சித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரை கைதுசெய்வதற்கு பொலிஸார் தேடி வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரவுவேளை வீடொன்றினுள் அத்துமீறி கூரிய ஆயுதங்களுடன் நுழைந்த மூவர், வீட்டில் இருந்த கணவனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி மனைவியை வன்புணர முயற்சித்துள்ளனர்.

அதன்போது அவர்கள் அபய குரல் எழுப்பவே, வீட்டினுள் நுழைந்த மூவரும் அவர்களை தாக்கி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஏனைய இருவரும் தலைமறைவாகியுள்ள நிலையில், கைதுசெய்யப்பட்டுள்ள இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள அதேவேளை, தலைமறைவாகியுள்ள இருவரையும் கைதுசெய்வதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# எலிக்காய்ச்சலால் இவ்வருடம் 6000இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

இந்த வருடத்தில் இதுவரை எண்பதுக்கும் மேற்பட்டோர் எலிக்காய்ச்சலால் உயிரிழந்துள்ளதாக தொற்றுநோயியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மாத்தறை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக பதிவாகியுள்ளதோடு, இந்த வருடம் நவம்பர் மாதத்தில் மாத்திரம் 962 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 1094 ஆகும்.

வைரஸ் தொற்றுள்ள எலிகள், கால்நடைகள் மற்றும் நாய்களின் மலம் மற்றும் சிறுநீர் தண்ணீரில் கலப்பதன் மூலம் மனிதர்களுக்கு தொற்று ஏற்படலாம்.

விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் சேற்றில் இறங்குவதற்கு முன்னர் இந்த வைரஸ் தொற்று ஏற்படாமல் இருக்க அரசாங்கம் வழங்கும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உட்கொள்வது முக்கியம் எனவும் சுகாதாரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

நுண்ணுயிர் எதிர்ப்பிகளை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் மற்றும் பொதுச் சுகாதார அதிகாரியிடம் பெறலாம். எனவே, பயிர்ச்செய்கையில் ஈடுபடும் மக்கள் இதில் அதிக கவனம் செலுத்தவேண்டியது அவசியமென சுகாதாரத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

# போதைப்பொருளிலிருந்து பிள்ளைகளை பாதுகாக்க அவசர நடவடிக்கை தேவை

## ஆயர் தொட்டவத்த மாவனல்லையில் அறிவுறுத்து





(எம்.எஸ்.அமீர் ஹுசைன்)

போதைப்பொருளுக்கு அடிமையாகின்ற வீதம் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் இருக்கின்றது. போதைப்பொருளுக்கு அடிமையாகிவிட்டால் அவர்கள் சமூகத்துக்கோ குடும்பத்துக்கோ பிரயோசனமற்றவர்களாக மாறிவிடுகின்றனர். குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் சுமையாக மாறுகின்றனர். அதனால் போதைப் பொருள் பாவனையிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க பெற்றோர் அவசரமாக நடவடிக்கையில் இறங்கவேண்டும் - என்று கேகாலை மாவட்ட தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் மாவட்ட சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு தொடர்பான வெளிக்கள உத்தியோகத்தரான ஆயர் எஸ்.சி.தொட்டவத்த வேண்டுகோள் விடுத்தார்.

போதைப்பொருள்களால் குறிப்பாக, அண்மைக்காலமாக பரவி வரும் ஐஸ் பாவனை காரணமாக பாதிக்கப்படும் இளம் தலைமுறையினரைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று மாவனல்லை கிருங்கதெனிய மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வை மேற்படி மஸ்ஜிதின் நிர்வாக சபையின் தலைவரும் பொறியியலாளருமான ஏ.எஸ்.எம்.அஸ்ஹரின் வழிகாட்டலில் இயங்கும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கான செயலணிக் குழு ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆயர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வு டிசம்பர் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையின் பின்னர் நடைபெற்றது.

இங்கு ஆயர் தொடர்ந்து பேசுகையில், போதைப்பொருட்கள் எவ்வாறு பாடசாலைப் பருவ மாணவர்கள்முதல் வளர்ந்தோர் வரையில் விற்பனை செய்யப்படுகின்றன, எவ்வாறான சந்தர்ப்பங்களில் போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்றனர், அடிமையாகிய பின்னர் அத்தகையவர்களில் ஏற்படும் மாற்றங்கள் யாவை, போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் நடந்துகொள்ளும் விதம் மற்றும் பாதுகாத்தல், புனர்வாழ்வளித்தல் உட்பட பல விடயங்கள் தொடர்பாக அறிவூட்டல் செய்தார். மாவனல்லை பிரதேசம் போதைப்பொருட்களற்ற பிரதேசமாக மாற வேண்டும். அதற்காக அனைவரும் ஒத்துழக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**போதைப் பொருள் வியாபாரிகள் பற்றியும் கடும் அவதானம் தேவை**

இந்நிகழ்வில் ஊடகவியலாளர் அமீர் ஹுசைன் தெரிவிக்கையில், இந்த போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் புனர்வாழ்வளிக்கும் பிரிவின் பணி பாராட்டத்தக்கதாகும். போதைப்பொருள் பாவிப்பவர்கள் மட்டுமல்லாமல் மாணவர்கள் மத்தியிலும் இளம் தலைமுறையினர்களிடையேயும் போதையைப் பழக்கி விற்பனை செய்து வருபவர்கள் குறித்து பொலிஸார் உட்பட இத்தகைய பிரிவுகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். போதைப்பொருள் வியாபாரிகள்தான் எமது சமூகத்தின் இளம் சந்ததியினர்களின் முதுகெழும்பை முறித்து அவர்களை நாசமாக்கி குடும்பங்களுக்கும் சமூகத்திற்கும் பயனற்றவர்களாக்கி வருகின்றனர்.

இத்தகைய வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பொலிஸார் குறித்து இப்பிரதேச மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகின்றது. உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்று கருதுகின்றனர். அதனால் உங்களது இந்தப் பிரிவு பாதுகாப்பு மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளை அழைத்து இவ்விடயம் தொடர்பாக தெரிவித்து போதைப்பொருள் குறிப்பாக, ஐஸ் விற்பனை செய்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.





**Director (Analytical Services)**
**Institution: Sri Lanka Tea Board**

Qualification: A degree in science which is recognized by UGC with Chemistry or Microbiology as a subject with least a postgraduate Degree (Masters') in Chemistry or Microbiology.
Apply: www.srilankateaboard.lk

**System Administrator**

Institution: Credit Information Bureau of Sri Lanka
Qualification: Bachelor's Degree in Computer Science or Information Technology discipline or equivalent qualification.
Experience: At least 05 years system administration.
Apply:
The General Manager,
Credit Information Bureau of Sri Lanka
Whiteaways Building,
No 25,
Sir Baron Jayathilaka Mawatha,
Colombo 01.

**Deputy General Manager**

Institution: The Condominium Authority
Apply:
Chairman,
The Condominium Authority,
1st floor, National Housing Development Authority,
Sir Chittampalam A. Gardiner Mawatha,
Colombo 02.

**Senior Banking Assistant**


Bank: DFCC
Qualification: Possess 5 years of experience in the field of banking, have a good knowledge on the products and services
Apply: https://dfccjobportal.peopleshr.com
Senior vice president (Human Resources)
DFCC Bank PLC, 73/5 Galle Road, Colombo 03.

**Assistant Manager – Internal Audit**

Bank: Cargills
Experience and Qualifications: Full/ Part Qualifications in Banking or Finance, Degree from a recognized university, Over 05 years of Experience in a Bank.
Apply: career@cargillsbank.com, Head of Human Resources, Cargills Bank Limited, No.696, Galle Road, Colombo 03.

**Marketing Executives**

Company: Data Management Systems (Pvt) Ltd
Requirements: Selected candidates are required to engage in marketing and selling the Company's product solutions.
Those who perform to the Company's expectations have a defined career growth path with promotional prospects to Senior Management.
Selected applicants will be rewarded with an attractive remuneration package in accordance with qualifications and experience as well as excellent career development opportunities in a pleasant work environment.
Apply: careers@dmslanka2.com







துருக்கியில் ஆரம்பமாகியுள்ள 'ஷீரோவேஸ்ட்' மாநாட்டில் இலங்கை பிரதிநிதியாக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் கலந்துகொண்டுள்ளார். வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இம்மாநாட்டுக்கு துருக்கியின் முதற்பெண்மணி எமினிஎடோர்கன் தலைமை தாங்குகிறார். காலநிலை மாற்றங்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் வீண்விரயங்களை பூச்சியமாக்கல் என்ற தொனிப்பொருளில் இம்மாநாடு துருக்கியில் நடைபெறுகிறது.

# மன்னாரில் சுனாமி நினைவேந்தல் அனுஷ்டிப்பு







(மன்னார் நகர் நிருபர்)

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று நேற்றுடன் 18 வருடங்கள் பூர்த்தியான நிலையில் மன்னார் மாவட்டத்திலும் சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்ட செயலகத்தில் தேசிய பாதுகாப்புத் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு ஏற்பாடுசெய்த சுனாமி நினைவேந்தல் நிகழ்வு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

காலை 9.27மணியளவில் சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது தீபம் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மன்னார் கலங்கரை கலை இலக்கிய நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் அதன் இயக்குனர் மோகன்ராஜ் தலைமையில் மன்னார் பிரதான பாலத்தடியில் சுனாமி நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது சுனாமி அனர்த்தத்தில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.







ஆழிப்பேரலையின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கு முன்றலில் நேற்று உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது. சுனாமி பேரலையில் உயிர்நீத்த உறவுகளின் நினைவுருவப் படத்திற்கு அகவணக்கம் செலுத்தி ஈகை சுடரேற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. இதன்போது யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# வவுனியாவில் சுனாமி நினைவுத் தூபி முன்பாக நினைவேந்தல் அனுஷ்டிப்பு





(வவுனியா நிருபர்)

வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயம் மற்றும் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் சுனாமி பேரலையில் உயிர்நீத்தவர்களுக்கான 18ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு சுனாமி நினைவுத்தூபி முன்பாக நேற்று (26) இடம்பெற்றது. பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக்கழக மைதான வளாகத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத் தூபியில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதன்போது உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், நினைவுத் தூபிக்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுப் பேருரைகளும் இடம்பெற்றன

நிகழ்வில் மதகுருமார்கள், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், நகரசபை தவிசாளர் இ.கௌதமன், உபதவிசாளர் சு.குமாரசாமி, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், நகரசபை உறுப்பினர்கள், நரசிங்கர் ஆலய நிர்வாகத்தினர், பொது அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





கிறித்தோதயம் மற்றும் புத்தாண்டை வரவேற்கும் ஒளி விழா, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் புதுச்செட்டித் தெரு வியாகுல மாதா தேவாலய பங்குத்தந்தை வணபிதா பீட்டர் சுபராஜ் புள்ளே உரையாற்றுவதையும் நத்தார் பஜனையில் கலந்துகொண்டோரையும் படங்களின் காணலாம்.

# குளோபல் பெயார் 2023 யாழ்ப்பாணத்துக்கு: அமைச்சர் மனுஷ நாணயக்கார அறிவிப்பு






குளோபல் பெயார் - 2023 தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சின் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் பங்களிப்போடு சர்வதேச மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்புகளுக்காக காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு அரிய வாய்ப்பு அடுத்த வருடம் முதல் காலாண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதென அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டார்.

குளோபல் பெயார் - 2023 பற்றி மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

குளோபல் பெயார் - 2022 நிகழ்ச்சிக்காக காலிக்குச் சென்று நாம் காலியில் உள்ள இளைஞர், யுவதிகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு வழியமைத்துக் கொடுத்ததோடு தொழிலாளர் மற்றும் ஊழியர் சேமலாப நிதி தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட தொழிற்றுறையில் ஏற்படக்கூடிய சகல விடயங்கள் தொடர்பாகவும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தோம்.

வெளிநாடுகளுக்குச் செல்லும்போது கடன் வழங்கல், பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள், மனிதவள முகாமைத்துவம், தொழிற்சந்தை தொடர்பாகவும் ஆரம்பம்முதல் இறுதிவரை அனைத்து பிரச்சினைகளுக்கும் ஓரிடத்தில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் ஓர் செயற்றிட்டத்தை குளோபல் பெயார் என்ற பெயரில் நாம் காலியி லிருந்து ஆரம்பித்தோம்.

நாம் இவ்வாறு காலியிலிருந்து ஆரம்பித்த இச்செயற்றிட்டத்தின் அனுபவங்களோடு அடுத்த கட்டமாக குளோபல் பெயார் - 2023இன் முதலாவது நிகழ்ச்சித் திட்டத்தை யாழ். நகரில் நடத்த எதிர்பார்க்கின்றோம்.

இங்கு சர்வதேச தொழிற்சந்தையை அறிமுகப் படுத்தல், தொழிலாளர் பிரச்சினைகளுக்கான தீர்வு உட்பட கொழும்பை மையமாகக்கொண்டிருக்கும் அனைத்து சேவைகளையும் வடக்கே பிரதான நகரமான யாழ்ப்பாணததில் பெற்றுக்கொடுக்கவும் அக்கால கட்டத்தினுள் முன்வைக்கப்படும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

இதற்காக சர்வதேச ஒழுங்கமைப்புகள், சர்வதேச நிறுவனங்கள், சர்வதேச தொழில் நிறுவனங்கள், பரந்துபட்ட இடப்பரப்பு, பரவலான வாய்ப்புகள் மற்றும் வசதிகள் பலவற்றை பெற்றுக் கொடுக்கவும், விசேடமாக இக்காலகட்டத்தில் தலையெடுத்திருக்கும் வெளிநாடு அனுப்புதலில் ஈடுபட்டிருக்கும் ஏமாற்றுக்காரர்கள் தொடர்பான விடயங்கள், நேர்மையான முறையில் வெளிநாடு செல்வது தொடர்பான அறிவூட்டல் உள்ளிட்ட வடக்கில் வாழும் மக்களுக்குத் தேவைப்படும் ஒத்துழைப்பை தெற்கில் வாழும் மக்களின் அன்புமிகு ஆதரவுடன் பெற்றுக்கொடுக்கவும் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

எனவேதான் வடக்கில் வாழும் எமது மக்களுக்கு எமது உண்மையான அன்பு பாசத்தை வெளிக்காட்டும் வகையில் தெற்கிலிருந்து ஆரம்பித்து வடக்கிற்கு எமது செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டோம்.

நாம் 2023 முதல் காலாண்டிற்குள் இச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

# துறைநீலாவணை மண்ணுக்கு பெருமை சேர்த்த இராமக்குட்டி

(செல்லையா பேரின்பராசா)



கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றிய மா.இராமக்குட்டி திறமை அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவையின் தரம் மூன்றிற்கு தெரிவுசெய்யப்பட்டு இப்பதவிக்கான முன்சேவைப் பயிற்சிக்காக சென்றுள்ளார்.

பொது எழுதுனர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவர், எழுதுநராக 1994.06.14ஆம் திகதி தொடக்கம் 1999.06.30ஆம் திகதிவாரை பிரதேச செயலகத்திலும் 1999.07.01ஆம் திகதி தொடக்கம் 2001.08.31ஆம் திகதிவரை பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்திலும் கடமையாற்றினார்.


எழுதுநர்களுக்கிடையே நடத்தப்பட்ட அதிசிறப்பு போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த இவர், 1999.07.01ஆம் திகதிமுதல் செயற்படும் வகையில் அதிசிறப்பு சேவைக்கு பதவியுயர்வு பெற்றார்.

இதனைத் தொடர்ந்து இவர் 2001.09.01ஆந் திகதி தொடக்கம் 2011. 06. 30 ஆந் திகதி வரை நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகவும் 2011. 07. 01ஆம் திகதி தொடக்கம் 2012.12.31ஆம் திகதிவரை களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் நிர்வாக உத்தியோகத்தராகவும் 2013.01.01ஆம் திகதி தொடக்கம் 2018.12.31ஆம் திகதிவரை நாவிதன்வெளி பிரதேச சபை செயலாளராகவும் 2019.01.01ஆம் திகதி தொடக்கம் இதுவரை கல்முனை வலயக்கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தராகவும் உள்ள நிலையில் இலங்கை நிர்வாக சேவைக்கு திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அருட்சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ.மத்தியூவின் மாணவரான இவர், தான் பணியாற்றிய பணியாற்றும் அரச அலுவலகங்களின் உயர் அதிகாரிகள் தொடக்கம் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரினதும் நன்மதிப்பை தனது சீரிய கடமையின் நிமித்தம் பெற்றவர்.

பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான இவர், துறைநீலாவணை மகாவித்தியாலயம் (தேசிய பாடசாலை) கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி (தேசிய பாடசாலை) என்பவற்றின் பழைய மாணவர் என்பதுடன், துறைநீலாவணையைச் சேர்ந்த காலஞ்சென்ற மாமாங்கம் - கண்ணகை தம்பதியினரின் புதல்வராவார்.

# ஊடகர் ஹுசைனுக்கு கொலை மிரட்டல் விடுப்பு



சிரேஷ்ட ஊடகவியலாளர் அமீர் ஹுசைனுக்கு அடையாளம் தெரியாத நபர் ஒருவர் தொலைபேசி மூலம் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்றிருக்கின்றது. இது தொடர்பாக டிசம்பர் 24ஆம் திகதி ஊடகவியலாளர் மாவனல்லை பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த தினம் இரவு 9.50 மணியளவில் ஊடகவியலாளர் அமீர் ஹுசைன் வீட்டில் இருந்தபோதே இவ்வாறு தொலைபேசி மூலம் அடையாளம் தெரியாத நபர் கொலை மிரட்டலை செய்துள்ளார். "நீ எங்கு இருக்கின்றாய். நீ யார் என்று எனக்குத் தெரியும். உன்னை என்ன செய்கின்றேன் என்று பார். உன்னை வெட்டிக் கொலை செய்யவேண்டும்" என்று அச்சுறுத்தல் விடுத்ததோடு, மிகவும் மோசமான தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து அச்சுறுத்தியுள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளரான அமீர் ஹுசைன் கடந்த 30 வருடங்களாக ஊடகத்துறையில் முழுநேர ஊடகவியலாளராக இருந்து பணியாற்றிவருவதோடு நாட்டின் சமகால பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ச்சியாக சிறப்புக் கட்டுரைகள் மற்றும் செய்திகளை எழுதி வருபவராவார். அத்துடன், நீண்ட காலமாக ஊடகத்துறை பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

மாவனல்லை பிரதேசத்தில் பரவி வரும் ஐஸ் பாவனையிலிருந்து மாணவர்களை பாதுகாப்பது தொடர்பாகவும் ஒட்டுமொத்த போதைப் பொருளுக்கு எதிராகவும் தமது எழுத்துகள் மூலம் முயற்சி செய்துவரும் ஒருவருமாவார். குறிப்பிட்ட கொலை மிரட்டல் தொடர்பாக மாவனல்லை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெரும் வரவேற்பைப் பெற்ற யாழ். பல்கலையின் முன்மாதிரியான சமுதாய சமையலறைத் திட்டம்

(யாழ். நிருபர்)

நாட்டின் பொருளாதார நிலை மந்தகதியான நேரத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் போதியளவு உணவு வசதியைப் பெறுவதில் நெருக்கடியை எதிர்கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சில விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் ஆரம்பித்த திட்டம் மாணவர்களின் ஒத்துழைப்புடன் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. திங்கள்முதல் வெள்ளிவரை ஏறத்தாழ ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேல் தங்கள் பசியை ஆற்றிச்செல்கின்றனர். சமையலில் மரக்கறி வெட்டுவதிலிருந்து மாணவர்களுக்கு உணவு பரிமாறுதல், பாத்திரம் கழுவுதல் என அனைத்து விடயங்களிலும் இவ்விரிவுரையாளர்களும் முழுமனதோடு ஈடுபடுவதுடன், மாணவர்களும் விரிவுரை தவிர்ந்த நேரங்களில் தங்களாலான உதவிகளைச் செய்துவருகின்றனர். சில விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட இச்சமூக சமையலறை உணவுத் திட்டத்திற்கு பல விரிவுரையாளர்கள் கைகோர்க்க ஆரம்பித்திருக்கின்றார்கள். ஏறத்தாழ 4 மாதங்களாக சிறப்பாக மாணவர்கள் பசியாற சமூக சமையலறை தொடர்ந்து இயங்கி வருகின்றது. நாட்டின் பொருளாதார நிலை சுமுகமாகும் வரை தொடர்ந்தும் இயங்குவதற்கு தங்களாலான உதவிகளை பல்கலைக்கழக பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் வழங்கமுடியும்.



இலங்கையில் எந்தவொரு பல்கலைக்கழகமும் எடுக்கமுடியாத, நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒரு மாணவர் நலன்சார் செயற்பாட்டை கிட்டத்தட்ட தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகின்ற நிலையில், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்கவே அதனை பார்வையிட்டு பாராட்டியிருந்தார். யாழ்ப்பாணப் பல்கலையில் கல்வி கற்கும் எந்தவொரு மாணவனும் மதிய நேரத்தில் பசியுடன் கல்வி கற்காமல் இலவசமாக உணவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் யாழ். பல்கலைக்கழக சமுதாய சமையலறை செயற்பட்ட வண்ணம் உள்ளது. ஒரு நாளுக்கு மாணவர்களுக்குரிய உணவுக்கான செலவு 50,000இற்கு மேல் என்ற நிலை இருந்தாலும் இச் செயற்பாடு இன்றுவரை முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

இச்செயற்பாட்டை ஆரம்பித்துவைத்த விரிவுரையாளர்கள், அந்த சமுதாய சமயலறை தொடர்பாக அதற்கென கூட்டங்கள் கூடி முடிவுகளை எடுக்கக்கூடிய முறையில் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களும் கலந்த குழு ஒன்றை அமைத்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா செயற்பட்டுவரும் விதம் பாராட்டுக்குரியது. பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் மற்றும் கலைப்பீட மாணவர்களும் இந்த செயற்பாட்டிற்காக துணைநிற்கும் பல்கலைக்கழக நிர்வாக உத்ததியோகத்தர்கள் மற்றும் இதனை செயற்படுத்துவதற்காக காலை முதல் மதியம் வரை உடல் உழைப்பினால் செயற்பட்டுவரும் மாணவர்கள் மற்றும் கல்விசார ஊழியர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

# கிழக்கில் 18ஆவது சுனாமி நினைவேந்தல் அனுஷ்டிப்பு

மாளிகைக்காடு,




கல்முனை கடற்கரை பள்ளிவாசல்




கிண்ணியா



மட்டக்களப்பு



சாய்ந்தமருது



கல்லடி



திருகோணமலை



பாண்டிருப்பு



மட்டக்களப்பு மாவட்ட செயலகம்



காரைதீவு



பாசிக்குடா



(மாளிகைக்காடு, கல்முனை, கிண்ணியா, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, வாழைச்சேனை, காரைதீவு, மூதூர், கல்லடி, மட்டக்களப்பு நிருபர்கள்)

உலகை உலுக்கிய அனர்த்தங்களில் சுனாமி அலையின் தாக்கம் தசாப்தங்கள் பல கடந்தும் அழியா நினைவுகள் கொண்டது. அந்த சுனாமி அலையில் சிக்கி எமது நாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.

இந்த துயரநாளின் 18 வருடங்கள் கடந்துள்ளதை எண்ணி துஆ பிரார்த்தனைகள், நினைவஞ்சலிகள் நாடுமுழுவதிலும் நடந்துவரும் நிலையில், கிழக்கு மாகாணத்திலும் பல்வேறு இடங்களில் சுனாமி நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அதன் ஓர் அங்கமாக மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசல், கல்முனை கடற்கரை பள்ளிவாசல், கிண்ணியா, சாய்ந்தமருது வொலிவேரியன் ஹிஜ்ரா மஸ்ஜித், பாண்டிருப்பு, பாசிக்குடா கடற்கரை, திருமலை வெருகல், மட்டக்களப்பு கல்லடி, மட்டு. மாவட்ட செயலகம், திருச்செந்தூர், நாவலடி, டச்பார் போன்ற கரையோரப் பிரதேசங்கள் மற்றும் காரைதீவு என பல்வேறு இடங்களிலும் குடும்பத்தினர், உறவினர்கள், முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு சுனாமி அனர்த்த 18ஆவது நினைவு தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டித்ததுடன், உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்தித்தனர்.

# சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்திய சுனாமி பேபி அபிலாஷ்





(மட்டக்களப்பு நிருபர்)

சுனாமி பேபி அவரது இல்லத்தில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தினார்.

சுனாமி தாக்கத்தினால் கிழக்கு மாகாணமே பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 2004.12.26 அன்று சுனாமியால் காணாமல்போய் பின்னர் வைத்தியசாலையில் கண்டுபிடிக்கப்பட்ட அபிலாஷ் என்ற ஆண் குழந்தைக்கு அப்போது 9 தாய்மார்கள் உரிமை கோரியிருந்தனர்.

அபிலாஷை அப்போதிருந்து 'சுனாமி பேபி' என்றே அழைக்கப்பட்டு வரப்படுகின்றார். பின்னர் மரபணுப் பரிசோதனை மூலம் மட்டக்களப்பு குருக்கள்மடத்தைச் சேர்ந்த ஜெயராசா தம்பதியினரது குழந்தையென உறுதிப்படுத்தப்பட்டு, அக்குழந்தை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

தற்போது அந்த அபிலாஷிக்கு 18 வயது. அபிலாஷ் தனது இல்லத்தில் வைத்துள்ள சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தூபியில் நேற்று பெற்றோருடன் இணைந்து சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினார்.

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த அனைத்து உறவுகளுக்கும் தாம் இந்த நேரத்தில் அஞ்சலி செலுத்துவதாக அபிலாஷ் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்ட வீதிகளின் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய கிராமப்புறங்களில் காணப்படும் வீதிகளை புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் புதிய வீதிகளை அமைப்பது தொடர்பாக விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் ஈஸ்ட் லகூன் விடுதியில் கடந்த சனிக்கிழமை (24) இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாவட்டத்திற்கு தேவையாக உள்ள வீதிகள் மற்றும் பாலங்களை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இதன்போது இராஜாங்க அமைச்சரால் அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற 'ஐ' திட்டம் தொடர்பான வீதி அபிவிருத்திப் பணிகள் குறித்து அமைச்சின் செயலாளரால் தெளிவுபடுத்தப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் முயற்சிகளை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்கள் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான கலந்துரையாடலும் இதன்போது இடம்பெற்றது.

19 கிராமிய பாலங்கள் அமைக்கப்பட்டு, தற்போது 11 பாலங்கள் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு சில வீதிகள் அமைக்கப்படாமை யால் மக்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்திசெய்ய முடியாதிருப்பதை இங்கு இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டிய துடன், எதிர்வரும் ஆண்டில் RDA மூலம் மேற்கொள்ளப்படவிருக்கின்ற வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர்.பேமசிறி, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் எந்திரி.கே.சிவகுமார், மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர் பி.பாரதன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், முன்னாள் மாநகர சபை முதல்வர் திருமதி சிவகீத்தா பிரபாகரன் மற்றும் துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# அக்கரைப்பற்றில் மரங்கள் சரிந்ததில் போக்குவரத்து பாதிப்பு - மின்சாரத் தடை



(மாளிகைக்காடு நிருபர்)


நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலையின் காரணமாக பலத்த காற்றுக்கு தாக்குப்பிடிக்க முடியாத இரண்டு தேக்கு மரங்கள் அக்கரைப்பற்று இசங்கணிச்சீமையில் கடந்த சனிக்கிழமை (24) இரவு பிரதான வீதியை குறுக்கறுத்து முறிந்து விழுந்ததினால் போக்குவரத்து தடைப்பட்டு மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

இதனால் பொதுமக்களும், பாதசாரிகளும் அசௌகரியத்தை சந்தித்தனர். விடயம் அறிந்து இசங்கணிச்சீமை வட்டாரத்திற்கு பொறுப்பான அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் டீ.எம்.ஐயூப், அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.றாஸிக்கை தொடர்புகொண்டு விடயத்தை எத்திவைத்ததன் காரணமாக அவர்களின் அதிரடியான நடவடிக்கையின் மூலம் பிரதேச சபையின் இயந்திரத்தினதும் பொதுமக்களின் - இலங்கை மின்சார சபையின் உதவியைக் கொண்டு மரங்கள் அகற்றப்பட்டு, போக்குவரத்து வழமைக்கு கொண்டுவரப்பட்டதுடன், மின்சார இணைப்பும் உடனடியாக சீரமைத்து வழங்கப்பட்டது.

இதன் போது அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஜி.பர்சாத், இசங்கணிச்சீமை ஜும்மா பள்ளிவாசல் தலைவர் ஏ.எல்.இஸ்மாலெப்பை, பிரதேச இளைஞர்கள், பொதுமக்கள், பிரதேச சபை ஊழியர்கள் ஆகியோர் துரிதமாக இயங்கி நிலைமையை இயல்பு நிலைக்குக் கொண்டுவந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பு சிறையிலிருந்து எட்டு கைதிகள் விடுதலை



(மட்டக்களப்பு நிருபர்)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு மட்டக்களப்பு சிறையிலிருந்து 08 சிறைக்கைதிகள் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சிறிய குற்றங்களுக்காகவும், வேறு காரணங்களுக்காகவும் தண்டனை பெற்றவர்களுக்கு நத்தார் பண்டிகையை முன்னிட்டு மன்னிப்பு வழங்கப்படுவதாக திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 08 சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வு மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் தலைமையில் இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் டபிள்யூ.ஏ.ஜே.அரவிந்த உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.


## போடியார் புலம்பல்!



**கொள்ளையடிக்கிற ஆக்களுக்கு சிவப்பு கம்பளம் விரிக்கிற நாடுதான் இலங்கை நாடு என எதிர்க்கட்சித் தலைவர் சஜீத் பிரேமதாச சொல்லியிருக்காரு எலுவா? சோக்கான கததான்டாம்பி இது. அதவிட இனப்படுகொல செய்தவங்களையும் சிம்மாசனம் ஏற்றிவைத்த நாடும் இது எலுவா? அடுத்து இனவாதம் கதைச்சி ஆட்சியமைக்கிற நாடும் ஒங்கட நாடு எண்டத ஒள்ளுப்பம் சேர்த்து சொல்லன் பாப்பம்!**

# சினிமா இறுவெட்டு கடை என்ற போர்வையில் மாணவர்களை இலக்குவைத்து மாவா விற்பனை

## பாண்டிருப்பில் சந்தேகநபர் கைது



(அம்பாறை நிருபர்)

சினிமா இறுவெட்டு (சீடி) கடை என்ற போர்வையில் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதை தரும் மாவா விற்பனையில் சூட்சுமமாக ஈடுபட்ட சந்தேகநபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு பிரதான வீதியிலுள்ள சினிமா இறுவெட்டு (சீடி) கடை ஒன்றில் சந்தேகத்திற்கிடமாக இளைஞர்கள் ஒன்றுகூடுவது தொடர்பில் நேற்று முன்தினம் (25) இரவு விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் ஒன்று கிடைத்தமைக்கமைய இச்சோதனை நடவடிக்கையை கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டனர்.

இதன்போது போதை தரும் மாவா விற்பனையில் சூட்சுமமாக ஈடுபட்ட கண்டி மடவளை பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் வசமிருந்து மாவா போதைப்பொருள் அடங்கிய பக்கெற்றுகள் மீட்கப் பட்டன.

மேலதிக விசாரணையை முன்னெடுத்த பின்னர் குறித்த இளைஞரால் நடத்திச் செல்லப்பட்ட கடையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த தடைசெய்யப்பட்ட மாவா போதைப்பொருளும் கைப்பற்றப் பட்டது.

பின்னர் கைதுசெய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்றுப் பொருட்கள் யாவும் பெரியநீலாவணை பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியதுடன், விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து 1 கிலோ 440 கிராம் மாவா போதைப்பொருள் மற்றும் மாவா வுக்கு கலக்கப்படும் இரசாயன ரின் 18 மீட்கப்பட்டுள்ளதாக கல்முனை விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், கைதான சந்தேகநபரை கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பெரியநீலாவணை பொலிஸாரிடம் ஒப்படைக்க விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பாலமுனை இளைஞர்கள் சபை ஏற்பாடுசெய்த இரத்ததான முகாம்



(சியாத்.எம்.இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஜி.போல் ரொஷானின் வேண்டுகோளுக்கிணங்க, பாலமுனை இளைஞர்கள் சபை ஏற்பாடுசெய்த இரத்ததான முகாம் கடந்த சனிக்கிழமை (24) பாலமுனையில் இடம்பெற்றது.

பாலமுனை இளைஞர்கள் சபைத் தலைவர் ஏ.எல்.எம்.சீத் தலைமையில் பாலமுனை மஹாஸினுல் உலும் இஸ்லாமியக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இந்த இரத்ததான முகாமில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு தமது இரத்தத்தை தானமாக வழங்கினர்.

இந்த இரத்ததான முகாமில் கலந்து கொண்டு நமது இரத்தங்களை தானமாக வழங்கியவர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரத்ததான முகாமில் இப்பிரதேசத்தின் அரசியல் பிரமுகர்கள், சமூக சேவையாளர்கள், பாடசாலை அதிபர்கள், சுகாதாரப் பிரிவினர் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தமையும் விசேட அம்சமாகும்.

# மாணவர்களை இலக்குவைத்தே போதைப்பொருள் விற்பனை; பிள்ளைகள் குறித்து பெற்றோர் அவதானமாக இருக்கவேண்டும்

## கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் சஹூதுல் நஜீம்

(மருதமுனை நிருபர்)

முஸ்லிம் பிரதேசங்களை இலக்குவைத்தே பாடசாலை மாணவர்கள் மத்தியில் இந்த போதைப்பொருள் அறிமுகப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றது. இன்று பாடசாலை மாணவர்கள் போதைக்கு அடிமையாகி தங்கள் கல்வியை பாழ்படுத்துகின்றனர். இந்த நிலை நாட்டில் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. இதனால் முஸ்லிம் மாணவர்களே அதிகம் பாதிக்கப் படுகின்றனர் - என கல்முனை வலயக் கல்விக் பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீம் தெரிவித்தார்.

மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற கலைநிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,




இன்று மாணவர்களின் கல்வி பின்னோக்கிச் செல்கின்றது. முன்பள்ளியில் மாணவர்களை வளப்படுத்துவதைப்போன்று க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர்தர மாணவர்களையும் ஊக்கப்படுத்தி வளப்படுத்தி சிறந்த மாணவர் சமூகத்தை உருவாக்க வேண்டும். அநேகமான மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிச் செல்கின்றனர். இதனால் கல்வி பாதிக்கப்பட்டு, திசைமாறி தீய வழியில் பயணிக்கின்றனர்.

முஸ்லிம் பிரதேசங்களை இலக்குவைத்தே பாடசாலை மாணவர்கள் மத்தியில் இந்த போதைப்பொருள் அறிமுகப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றது. இன்று பாடசாலை மாணவர்கள் போதைக்கு அடிமையாகி தங்கள் கல்வியை பாழ்படுத்துகின்றனர். இந்த நிலை நாட்டில் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. இதனால் முஸ்லிம் மாணவர்களே அதிகம் பாதிக்கப் படுகின்றனர்.

இதனால் அவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டு வாழ்க்கை சீரழிந்து போகின்றது. பெற்றோர்களின் கவனக் குறைவே இதற்குக் காரணமாகும். பிள்ளைகள் எங்கு செல்கின்றார்கள், யாருடன் தொடர்புபட்டிருக்கின்றார்கள் என்பதில் மிகவும் அவதானமாக இருக்கவேண்டியது பெற்றோரின் அளப்பரிய கடமையாகும் - என்றார்.

# சட்டவிரோதமாக வெளிநாட்டு சிகரெட்டுகளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபரொருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

சட்டவிரோதமாக தடைசெய்யப்பட்ட சிகரெட்டுகளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீடொன்றில் சந்தேகத்திற்கிடமாக சட்டவிரோத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை அறிந்து அங்கு சென்ற கல்முனை விசேட அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது சுமார் 800 வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமாக தம்வசம் வைத்திருந்த 54 வயதுடைய குடும்பப் பெண் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப் பட்டுள்ளதுடன், சந்தேகநபர் வசமிருந்து வெளிநாட்டு சிகரெட் அடங்கிய பக்கெற்றுகள் மீட்கப்பட்டது.




பின்னர் கைதுசெய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் யாவும் நிந்தவூர் பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக் காக பாரப்படுத்தியதுடன், விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

# அமெரிக்காவில் கடும் குளிர் - பனிப் புயல்: 39 பேர் உயிரிழப்பு; 20 கோடி பேர் பரிதவிப்பு




அமெரிக்காவில் கடும் குளிர், வீசும் பனிப்புயலில் சிக்கி 32 பேர் உயிரிழந்துள்ளனர். கடும் குளிரால் 20 கோடி பேர் அவதிக்குள்ளாகியுள்ளனர். 2,360இற்கும் மேற்பட்ட சர்வதேச விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. அத்துடன் வீதி, விமானம், ரயில் போக்குவரத்துகள் முடங்கியுள்ளன.

பருவநிலை மாற்றத்தின் எதிரொலியாக ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் அதன் தாக்கம் பரவலாக காணப்படுகிறது.

அமெரிக்காவில் தற்போது குளிர்காலம் நிலவுகிறது. வழக்கத்தை விட மைனஸ் 48 டிகிரி செல்ஷியஸ் குளிர் பதிவாகியுள்ளது. இந்நிலையில், கடுமையான பனிப்பொழிவு, உறைய வைக்கும் பனிப் புயல் (வெடிகுண்டு சூறாவளி - Bomb cyclone) வீசி வருகிறது.


குளிர், பனிப் புயலில் சிக்கி இதுவரை 39 பேர் உயிரிழந்துள்ளனர். நியூயோர்க்கிலேயே அதிகப்படியான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. அங்கு 17 பேர் உயிரிழந்துள்ளதாக அம்மாநில மேயர் அறிவித்துள்ளார்.

அத்தோடு பனிப் புயல் காரணமாக 2,360இற்கும் மேற்பட்ட சர்வதேச விமானங்கள் இரத்துசெய்யப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டன. இந்த வானிலை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், புத்தாண்டு கொண்டாட்டங்களும் தடைப்படலாம் என்று கூறப்படுகிறது.

ஐஸ் கட்டிகளாக வீதியில் விழுகின்றன. இதனால் மக்கள் வெளியேற முடியாமல் வீட்டிற்குள்ளேயே முடங்கியுள்ளனர். 50இற்கும் மேற்பட்ட மாகாணங்களில் மொத்த மக்கள் தொகையில் 60% பேர் (20 கோடி மக்கள்) கடும் குளிரில் அவதிப்பட்டு வருகின்றனர்.

பலத்த காற்று வீசுவதால், மின்கம்பங்கள் மற்றும் மின்நிலையங்கள் சேதமடைந்துள்ளன. இதனால், 15 இலட்சம் வீடுகள், அலுவலகங்கள் மின்சாரமின்றி இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. சுமார் 30 மணிநேரம் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. வாட்டி வதைக்கும் கடும் குளிருக்கு மத்தியில் மின் துண்டிக்கப்பட்டுள்ளதால் ஹீட்டர்களை பயன்படுத்த முடியாமலும் மக்கள் மிகுந்த அவதிக்குள்ளாயினர். கடும் பனிப்பொழிவு காரணமாக வீதிகள் அனைத்தும் ஐஸ் கட்டிகளால் மூடியுள்ளன. பலர் வாகனங்களுக்குள்ளே சிக்கிக் கொண்டுள்ளனர். இதனால், உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது.





வொஷிங்டன் டி.சியில் 30 ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு மிக குறைந்த வெப்பநிலை பதிவாகியுள்ளது. அமெரிக்காவில் மின்னிபோலிஸ் நகரத்தில் மைனஸ் 6 டிகிரி பரன்ஹீட் என மிக அதிக குளிரான நகராக பதிவானது.



### அகதிகள் அவதி

அமெரிக்காவில், அகதிகளாகத் தஞ்சமடைய மெக்சிக்கோ எல்லையில், கடும் குளிரில் நடுங்கியபடி ஆயிரக்கணக்கானோர் காத்துக் கிடக்கின்றனர்.

கொரோனா அச்சுறுத்தலால், அகதிகள் நுழைய ட்ரம்ப் அரசால் விதிக்கப்பட்டிருந்த தடையை, அந்நாட்டு உச்ச நீதிமன்றம் மேலும் நீடித்து உத்தரவு பிறப்பித்தது.

இரவில், மைனஸ் 6 டிகிரி வரை குளிர் பதிவாவதால், அமெரிக்க எல்லை அருகே முகாம்கள் அமைத்து தங்கியுள்ளவர்கள் செய்வதறியாது திகைத்துள்ளனர்.

## மனித இனம் பணத்திற்காகவும் அதிகாரத்திற்காகவும் அலைகிறது

### போப் பிரான்சிஸ் வேதனை



''பணத்திற்காகவும், அதிகாரத்திற்காகவும் மனித இனம் அலைகிறது'' - இவ்வாறு போப் பிரான்சிஸ் வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதிலுமுள்ள கிறிஸ்தவர்கள் நேற்றுமுன்தினம் கிறிஸ்மஸ் தினத்தை (இயேசு பிறந்த தினம்) கொண்டாடிய நிலையில் வாத்திகானிலுள்ள தேவாலயத்தில் கிறிஸ்துமஸ் வாழ்த்து தெரிவித்து உலக மக்களிடம் உரைகையிலேயே போப் பிரான்சிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாம் இன்னமும் எத்தனை போர்களைப் பார்க்கப் போகிறோம். போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் துயர நிலையில் இருக்கிறார்கள். போராலும், வறுமையாலும், அநீதியாலும் இறந்த குழந்தைகளை இந்த தருணத்தில் நான் நினைத்துப் பார்க்கிறேன். உலகில் ஆண்களும் பெண்களும் அதிகாரத்திற்காகவும், பணத்திற்காகவும் அலைகிறார்கள். இதற்காக, அண்டைவீட்டார், பெண்கள், சகோதர, சகோதரிகள் என அனைவரையும் துன்பப்படுத்துகிறார்கள்" என்று வேதனையுடன் தெரிவித்தார்.

## ஆழிப்பேரலையின் ஆறா வடுக்கள்





'சுனாமி' எனும் ஆழிப்பேரலை உலக நாடுகளை உலுக்கி எடுத்த நாள் டிசம்பர் 26. பேரலை தாக்கிச் சென்று இன்றுடன் (நேற்று 26) 18 ஆண்டுகள் கடந்துள்ளன.

இந்தோனேஷியாவில் 2004 டிசம்பர் 26ஆம் திகதி சுமத்ரா தீவின் கடல் பகுதியில் 9.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து எழும்பிய ஆழிப் பேரலைகள் இந்தோனேஷியா, இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து உள்ளிட்ட 14 நாடுகளில் கடலோரப் பகுதிகளை வாரி சுருட்டியது.

உயிர் சேதத்துடன், கோடிக்கணக்கில் பொருட் சேதத்தையும் ஏற்படுத்திய இந்த 'சுனாமி' என்ற வார்த்தையை எவரும் கேள்விப்பட்டதில்லை. கடல் அலை ஊருக்குள் வந்தபோதுதான் சுனாமி என தெரிந்தது. இதன் கோபம் வெறும் பத்து நிமிடம்தான். அது ஏற்படுத்திய வடுக்கள் இன்றும் ஆறா ரணங்களை ஏற்படுத்தியுள்ளன.

'சுனாமி' என்பது ஜப்பானிய மொழி சொல். 'துறைமுக அலை' எனப் பொருள். ஆழிப்பேரலை எனவும் அழைக்கப்படுகிறது. நிலநடுக்கம் மூன்று விதங்களில் ஏற்படுகிறது. தரைப்பகுதியில் ஏற்படும்போது, நிலம் பிளவுபட்டு கட்டடங்கள் தரைமட்டமாகின்றன. மலைப்பகுதியில் ஏற்படும்போது எரிமலை உருவாகிறது. இதுவே கடலில் நிலநடுக்கம் ஏற்படும்போது 'சுனாமி' எனும் ஆழிப்பேரலை உருவாகிறது.

இந்தியாவில் தமிழகம், ஆந்திரா, கேரளா, புதுச்சேரியை சுனாமி தாக்கியது. 12,000 பேர் பலியாகினர். இதில் 7,000 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். கடலோர மாவட்டங்களான சென்னை, நாகை, கடலூர், கன்னியாகுமரி பாதிக்கப்பட்டன. இதன் தாக்கம் இன்றும் மக்கள் மனதைவிட்டு அகலவில்லை. இதன் நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. சுனாமியால் உறவுகளை இழந்தோர் கடலில் மலர், பால் ஊற்றி அஞ்சலி செலுத்தினர்.

உலக செய்திகள்

## தினசரி கொரோனா பாதிப்பு விவரம்: வெளியிடுவதை நிறுத்தியது சீனா

கொரோனா பரவல் அதிகரித்துவரும் நிலையில், தினசரி கொரோனா தொற்று பாதிப்பு விவரத்தை வெளியிடுவதை சீனாவின் தேசிய சுகாதார ஆணையம் நிறுத்தியுள்ளது.

சீன அரசு வெளியிடும், தொற்று விவரங்களின் நம்பகத்தன்மை சந்தேகத்திற்குள்ளான நிலையில், காரணம் குறிப்பிடாமல், தினசரி தொற்று பாதிப்பு விவரங்கள் வெளியிடுவதை சீனா நிறுத்தியுள்ளது.

ஆராய்ச்சி மற்றும் குறிப்புக்காக தொற்று பாதிப்பு விவரங்களை நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான சீன நிலையம் வெளியிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் தினசரி மில்லியன் கணக்கானோர் தொற்று பாதிப்புக்குள்ளாவார்கள் என்றும், சுமார் ஐந்தாயிரம் பேர் வரை உயிரிழக்கக்கூடும் என கணிக்கப்பட்ட நிலையில், கடந்த 4 நாட்களாக தொற்று பாதிப்பால், உயிரிழப்பு ஏற்படவில்லை என சீனா தெரிவித்துள்ளது.

## சால்ட் பே இற்கு எதிரான விசாரணை ஆரம்பம்

(ரமணி)



உலகக்கிண்ண இறுதிப் போட்டியின் பின்னர் ஆர்ஜென்ரீன வீரர்களின் வெற்றிக் கொண்டாட்டத்தின்போது துருக்கியின் சமையல்காரர் சால்ட் பே ஆடுகளத்தில் சம்பியன் கிண்ணத்தை எப்படி கையாள முடிந்தது என்பது தொடர்பாக பீபா விசாரணையைத் தொடங்கியுள்ளது. சால்ட் பேயின் உண்மையான பெயர் நஸ்ரெட் கோகே.

டோஹாவிலுள்ள லுசைல் மைதானத்தில் ஆர்ஜென்ரீனாவின் வியத்தகு வெற்றிக்குப் பிறகு அவரது நடத்தைக்காக அவர் பரவலாக விமர்சிக்கப்பட்டார். அங்கு அவர் வீரர்களின் கொண்டாட்டங்களுக்கு இடையூறு விளைவித்தார். சம்பியன் கிண்ணத்தைத் தூக்கிப் பிடித்தார். லியோனல் மெஸ்ஸி உட்பட சில வீரர்கள் சால்ட் பே முன்னிலையில் எரிச்சலடைந்தனர். இருப்பினும், போட்டியின் கோல்டன் போல் வெற்றியாளர் அவரது இன்ஸ்டாகிராம் கணக்கில் சமையல்காரருடன் புகைப்படம் எடுத்தவர்களில் ஒருவராவார்.

பீபா விதிகளின் கீழ் உலகக்கிண்ண வெற்றியாளர்கள், பீபா அதிகாரிகள் மற்றும் அரச தலைவர்கள் ஆகியோர் கிண்ணத்தை வைத்திருக்கக்கூடிய வரையறுக்கப்பட்ட நபர்களில் அடங்குவர். இதன் மதிப்பு சுமார் $20 மில்லியன் (16.6 மில்லியன்/18.7 மில்லியன்).

அவரும் மற்ற விருந்தினர்களும் எவ்வாறு ஆடுகளத்தை அணுக முடிந்தது என்பதை ஆராய்வதாக கால்பந்தின் உலகளாவிய நிர்வாகக் குழு உறுதிப்படுத்தியுள்ளது.

கட்டார் 2022 உலகக் கிண்ணப் போட்டியின் போது போது சால்ட் பே விஐபி அணுகலைப் பெற்றார்இ பீபாதலைவர் கியானி இன்ஃபான்டினோ உட்பட அவரது சமூக ஊடகங்களில் ஏராளமான புகைப்படங்களையும் வீடியோக்களையும் வெளியிட்டார்.

2018 இல் UEFA சம்பியன்ஸ் லீக் இறுதி வெற்றிக்குப் பிறகு ரியல் மாட்ரிட் வீரர்களுடன் சமையல்காரர் புகைப்படம் எடுத்தார்.

லிவர்பூலின் 3-1 தோல்வியின் முதல் பாதியின்போது காயமடைந்து கண்ணீருடன் ஆடுகளத்தை விட்டு வெளியேறிய எகிப்திய விங்கர் மொஹமட் சாலாவுடன் போஸ் கொடுத்ததற்காக அந்தப் போட்டிக்குப் பிறகும் அவர் விமர்சனங்களை எதிர்கொண்டார். 2023ஆம் ஆண்டு அமெரிக்க ஓப்பனில் பெப்பே கலந்துகொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## இறுதிப்போட்டியில் ஒரு தவறு செய்ததாக ஒப்புக்கொண்ட நடுவர்




2022 பீபா உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் ஒரு தவறு செய்ததாக போலந்து நாட்டைச் சேர்ந்த நடுவர் மார்சினியாக் ஒப்புக்கொண்டார். ஆர்ஜென்ரீனா வெற்றிபெற்ற பிறகு நடுவரின் முடிவுகளுக்கு எதிராக பிரான்ஸ் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

41 வயதான மார்சினியாக், விளையாட்டில் அவர் எந்த பெரிய தவறையும் செய்யவில்லை என்றாலும் அவர் வித்தியாசமாக எடுக்கக்கூடிய சில முடிவுகள் உள்ளன என்று கூறினார். ஆர்ஜென்ரீனாவின் வீரர் மேக்ரோஸ் அகுனாவின் மோசமான தாக்குதலுக்குப் பிறகு அவர் ஒரு பிரெஞ்சு எதிர்த்தாக்குதலில் குறுக்கிட்டதாக அவர் கூறினார்.

ஃபவுல் செய்யப்பட்ட வீரர் ஓய்வெடுக்க விரும்புவதாக கூறியதாகவும் ஆனால், அவர் அங்கு எதுவும் தவறு நடக்கவில்லை என்று கூறியதாகவும் அதை தவறாகப் புரிந்துகொண்டதாகவும் மார்சினியாக் கூறினார். மறுபக்கம் பிரான்ஸ் ரசிகர்களின் பெரும் விமர்சனத்தையும் அவர் சந்தித்து வருகிறார்.

மூன்று கூடுதல் வீரர்கள் மைதானத்திற்குள் நுழைந்தபோது ஆர்ஜென்ரீனா வீரர்கள் பீபா விதியை மீறி மெஸ்ஸியின் கூடுதல் நேர கோலை அனுமதித்ததற்காக பிரெஞ்ச் ரசிகர்களும் ஊடகங்களும் அவரை விமர்சிக்கின்றன. மேலும், இறுதிப் போட்டியை மீண்டும் விளையாட பிரான்ஸ் ரசிகர்கள் மனுவில் கையெழுத்திட்டுள்ளனர்.

மார்சினியாக் போட்டி நடுவராக இருந்தமை பெரிதும் பாராட்டப்பட்டது. அவர் விவாதித்த சிறு தவறு போட்டியின் முடிவுகளை பாதிக்காமல் இருக்கலாம். பிரான்ஸ் வீரர்களின் கோரிக்கைக்கு அதிக ஆதாரம் இல்லாததால் அவர்களின் கோரிக்கை பலன் தராது என தெரிகிறது.

## பேருவளை சீனன்கோட்டை ஸன்ரைஸ் விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு




(பேருவளை பீ.எம்.முக்தார்)

களுத்துறை மாவட்டத்தில் முன்னணி உதைபந்தாட்ட கழகங்களில் ஒன்றான பேருவளை சீனன்கோட்டை ஸன்ரைஸ் விளையாட்டுக் கழகத்திற்கு சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணத் தொகுதியை சீனன்கோட்டையைச் சேர்ந்த இளம் இரத்தினக்கல் வர்த்தகரும் பிரேமியர் இன்டர்நெசனல் உரிமையாளருமான பைஸர் ஹூஸைன் அன்பளிப்புச் செய்தார்.

இந்த விளையாட்டு உபகரணத் தொகுதி கையளிக்கும் வைபவம் அண்மையில் சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் நடைபெற்றது. கழக செயலாளர் கிஸான் ஹாஷிமிடம் இந்த உபகரணத் தொகுதி கையளிக்கப்பட்டது. சமூக சேவையாளரும் இரத்தினக்கல் வர்த்தகமான பி.எம்.ரிஸ்வான் உட்பட ஸன்ரைஸ் கழக வீரர்கள் பலரும் நிகழ்வில் பங்குபற்றினர்.



உதைபந்தாட்ட துறையின் மூலம் சீனன்கோட்டைக்கு தொடர்ந்தும் புகழ் சேர்த்துவரும் ஸன்ரைஸ் விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணத் தொகுதி அன்பளிப்பு செய்யக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். என்றும் எதிர்காலத்திலும் இதைவிட கூடுதலான உதவிகளை செய்வேன் என பைஸர் ஹூஸைன் இதன்போது தெரிவித்தார்.

## தேசிய தெரிவுக் குழு இடைக்காலத் தலைவராக அப்ரிடி



பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தேசிய தெரிவுக் குழு இடைக்காலத் தலைவராக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் ஷஹீட் அப்ரிடி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தெரிவுக் குழுத் தலைவராக இருந்த ரமீஸ் ராஜா அண்மையில் பதவி விலகினார். இதைத் தொடர்ந்து ஷஹீட் அப்ரிடி தெரிவுக் குழுவின் இடைக்காலத் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அப்துல் ரசாக், ராவ் இப்திகார், அஞ்சும் உள்ளிட்டோர் அடங்கிய தெரிவுக் குழுவை அப்ரிடி வழிநடத்துவார். மேலும் தெரிவுக்குழுவுக்கு ஹாரூன் ரஷித் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.

தெரிவுக் குழு இடைக்காலத் தலைவராக தெரிவுசெய்யப்பட்டமை குறித்து ஷஹீட் அப்ரிடி கூறியதாவது: எனக்கு மதிப்பளித்து இந்தப் பொறுப்பை வழங்கியது தொடர்பாக நான் பெருமை கொள்கிறேன். எனது திறமையின் மூலம் இந்தப் பணியைச் சிறப்பாக செய்வேன். பாகிஸ்தான் அணி வெற்றிப் பாதைக்கு திரும்ப வேண்டும் எனக் கூறினார்.

## ஆஸி. ஓபனில் விளையாடும் ஜோகோவிச்

அவுஸ்திரேலிய ஓபனில் ஜோகோவிச் விளையாடுவது உறுதியாகியுள்ளது. மெல்பேர்ன் பூங்காவில் ஒன்பது முறை சம்பியனான ஜோகோவிச், 202 ஆம் ஆண்டில் சீசனின் தொடக்க கிராண்ட்ஸ்லாம் போட்டியில் பங்கேற்க முடியவில்லை. கொரோனா தடுப்பூசி போடாமையால் அவர் நாடு கடத்தப்பட்டார். உலகின் ஐந்தாம் நிலை வீரரான அவர் மெல்பேர்னில் 10ஆவது பட்டத்தையும், ஒட்டுமொத்த ஆடவர் சாதனைக்கு சமமான 22ஆவது கிராண்ட்ஸ்லாம் விருதையும் வெல்ல எதிர்பார்த்திருக்கிறார்.

கொரோனா தடுப்பூசி போடாமையினால் இந்த ஆண்டு ஜோகோவிச் நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் விளையாடவில்லை. 2022ஆம் ஆண்டு டெல் அவிவ், அஸ்தானா, டூரினில் நடந்த ஏடிபி பட்டங்களை வென்றார். அத்துடன், பரிஸ் மாஸ்டர்ஸின் இறுதிப் போட்டியையும் அடைந்தார். அவர் ரோம் மற்றும் விம்பிள்டனில் கிண்ணங்களை வென்றார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7